விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 09 புதன்கிழமை (25.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 280

# அரசின் முழுமையான ஆதரவை கூட்டமைப்பிற்கு வழங்குங்கள்

## மகிந்தவிடம் அமெரிக்கா வலியுறுத்து



(நியூயோர்க்)
வடக்கு மாகாணசபையில் ஆட்சி அமைக்கப் போகும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசாங்கம் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆதரவாளர்கள் மீது தொடரும் தாக்குதல்கள்!

(யாழ்ப்பாணம்)
வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து வடக்கில் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல்கள் இடம் பெற்று வருகின்றது.

அந்த வகையில் நேற்றைய தினம் கச்சாய் கடற்கரை பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர் ஒருவர் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று இனம்தெரியாத நபர்களினால் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது. 20-ம் பக்கம் பார்க்க

## நிரந்தரத் தீர்வினை பெற முயற்சியுங்கள்

– ப. சிதம்பரம்



(சென்னை)
வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றதன் மூலம், அரசியல் அமைப்பின் 13-வது திருத்தச் சட்டத்திற்கு 20-ம் பக்கம் பார்க்க

## மல்லாகத்தில் கைக்குண்டு வீச்சு

(மல்லாகம்)
மல்லாகத்தில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டு வீச்சில் சனசமூக நிலையமொன்று சேதமடைந்துள்ளது.

இந்த கைக்குண்டு வீச்சு நேற்றிரவு 9.40 மணியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மல்லாகம் மத்தியில் உள்ள அம்பனாக்கடவை வீதியென அழைக்கப்படும் சேச் வீதியில் உள்ள சுவாமி ஞானப்பிரகாசர் சனசமூக நிலையம் மற்றும் நூலகக் கட்டிடத்தின் அருகாமையில் கைக்குண்டு வழ்ந்து வெடித்துள்ளது. 02-ம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய மாநாட்டை மன்மோகன் புறக்கணிப்பார்

### நாராயணசாமி நம்பிக்கை

(புதுடில்லி)
கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இந்திய பிரதமர் மன்மோகன்சிங் புறக்கணிப்பார் என இந்திய மத்திய இணையமைச்சர் வி.நாராயணசாமி நேற்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் எதிர்ப்புகளை கவனத்தில் கொண்டு பிரதமர் கொழும்பில் நடைபெறும் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளமாட்டார் என நம்புவதாக இந்திய ஊடகங்களிடம் அவர் 02-ம் பக்கம் பார்க்க

## யாழ்.போதனா வைத்தியசாலையில் 87 மருத்துவர்களுக்கு இடமாற்றம்

### மருத்துவப் பணிகள் பாதிப்புறும் அபாயம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சிரேஷ்ட மருத்துவ அதிகாரிகளில் 87 பேருக்கு சுகாதார அமைச்சு இடமாற்றம் வழங்கியுள்ளது.

இவர்களுக்குப் பதிலாக 15 மருத்துவர்களே இங்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் இதனால் யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவப் பணிகள் பாதிக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மருத்துவர்களுக்கு இடமாற்றம் வழங்கும் போது அதற்கு ஈடாக பதிலீடு செய்யுமாறும் 02-ம் பக்கம் பார்க்க

## கண்ணிவெடியில் சிக்கி சிதறியது உழவு இயந்திரம்

### ஒருவர் பலி ; இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
முகமாலை முன்னரங்கக் காவலரண்கள் இருந்த பகுதியூடாக கம்பிக் கட்டைகள் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம், கண்ணிவெடியில் சிக்கியதில் அதில் பயணம் செய்த ஒருவர் பலியானதுடன், இருவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று காலை 10.30 மணியளவில் இவ்விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அறத்திநகர், அல்லிப்பளையினைச் சேர்ந்த அற்புதராசா சுதாகரன் (வயது 30) என்பவர் உயிரிழந்துள்ளதுடன், அதே இடத்தினைச் சேர்ந்த குகானந்தன் சுதாகரன் (வயது 17), துரைசிங்கம் நிரோஜன் (வயது 17) ஆகியோர் 20-ம் பக்கம் பார்க்க

## வடக்குத் தேர்தலில் இராணுவத் தலையீடு!

(கொழும்பு)
இலங்கையின் அரசியல் யாப்பில் 2010ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 18-வது திருத்தச் சட்டம் போட்டித் தன்மை கொண்டதாகவும், சாதாரணமான தேர்தலுக்கான சட்டரீதியான கட்டமைப்பிற்கு தடையாகவும் உள்ளதாக வட மாகாணசபைத் தேர்தலைக் கண்காணித்த பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், வட மாகாணசபைத் தேர்தலில் படைத்தரப்பின் தலையீடுகள் பெருமளவில் காணப்பட்டதுடன், சில வேட்பாளர்களுக்கு சார்பாக படையினர் செயற்பட்டதை தெளிவாகக் காணக்கூடியதாக இருந்ததாகவும் இக்குழு குற்றம சுமத்தியுள்ளது.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்று முடிந்த வட மாகாணசபைத் தேர்தலைக் கண்காணித்த பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்புக் குழு தனது 20-ம் பக்கம் பார்க்க

## அமைதியான தேர்தலுக்கு பிரித்தானியா பாராட்டு

(லண்டன்)
இலங்கையில் இராணுவ மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னர் மூன்று மாகாணங்களிலும் அமைதியான முறையில் தேர்தல் நடத்தப்பட்டமை தொடர்பில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டர் பேர்ட பாராட்டுத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் அதிகளவில் வாக்குகளை பயன்படுத்தியமை அவர்களின் ஜனநாயக செயற்பாடுகளில் ஈடுபடும் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது.


மூன்று மாகாணங்களிலும் பெரும்பாலும் அமைதியான முறை



யில் வாக்களிப்பு நடைபெற்றதுடன் அதிகளவான வாக்குகள் பதிவானதாக உள்நாட்டு மற்றும் பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்கள் விபரித்துள்ளனர். 20-ம் பக்கம் பார்க்க

## விக்னேஸ்வரனின் ஆலோசனைப்படியே வடக்கிற்கான உதவிகள் வழங்கப்படும்

### இந்திய மத்திய இணை அமைச்சர் தெரிவிப்பு



(சென்னை)
வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் ஆலோசனையின் பேரிலேயே இந்திய மத்திய அரசின் நிவாரணப் பணிகளுக்கான உதவித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என அந்நாட்டின்மத்திய இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

வட மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, வடமாகாண சபைத்தேர் 20-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மல்லாகத்தில்...

இதனால் சனசமூக நிலையத்தின் கட்டிடச்சுவர் மற்றும் அருகில் உள்ள வீட்டின் கதவுச் சுவர் என்பவற்றில் குண்டுச் சிதறல்கள் பட்டுள்ளதுடன் சேதமும் ஏற்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்கள் இந்த கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச்சென்றுள்ளார்கள்.

குறிப்பிட்ட சனசமூக நிலைய முன்றலில் இரவு வேளையில் இளைஞர்கள் இருந்து கதைப்பதாகவும் அவர்களை இலக்க வைத்து இந்த குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கபடுகின்றது.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராய்ச்சி தலைமையிலான பொலிஸ் குழுவினர் உடனடியாக சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு விரைந்து விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர். (செ-11)



## 4ம் ஆண்டு நினைவில்...

துளிராய் 05-05-1975

சருகாய் 25-09-2009

**கந்தசாமி கிருஷ்ணரூபன்**

முத்தானவனை எங்கள் முதல்வனை இழந்த
நான்காம் ஆண்டின் நிறைவு
மூழ்கிய துயரக்கடலும் – எம்மை
மீளவிட முடியவில்லை – உனையிழந்து
சித்தம் கலங்கி வாழ்வதுதான்
ஆண்டவன் சித்தமெனில் நாமென்
செய்வோம் – ஆண்டவனடியில் நீ ஆறுதல்
அடைய அஞ்சலிப்போம் ஆராதிப்போம்.

பண்டித்தறை, நெல்லியடி, கரவெட்டி. (C-4906) – குடும்பத்தினர் –

## பொது...

குறிப்பிட்டுள்ளார். பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பான தனது முடிவை பிரதமர் விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் எனவும் அமைச்சர் கூறினார். (செ-11)

## யாழ். போதனா ...

இவ் இடமாற்றத்தைப் படிப்படியாக மேற்கொள்ளுமாறும் யாழ்.போதனா வைத்திய சாலை மருத்துவர்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை, 87 மருத்துவர்களுக்கு சடுதியாக சுகாதார அமைச்சு வழங்கும் இடமாற்றத்துக்கு ஆதரவாகச் செயற்படும் யாழ்.போதனா வைத்திய சாலை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைமைக்கு எதிராக இன்று நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளதாகவும் மருத்துவர்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. (ந)


**வீடு விற்பனைக்கு**

நெல்லியடி (Ravun) அருகாமையில் இரண்டு கடையும் புதிதாய் கட்டிய வீடும் காணியுடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புக்கு: 077 958 5764 (சி-4905)


**என் இரத்தத்தின் துளிகளே!**
**இதயத்தின் தொனிகளே!**
**தமிழ் நெஞ்சங்களே**



நீங்கள் எனக் களித்த விருப்பு வாக்குகள் என் கட்சிக்குள் அதிகமே. நன்றி
நீங்கள் அளித்த அவ்வாக்குகள் மண்ணானவைகள் அல்ல பொன்னானவைகளே என நீங்கள் பெருமிதம் அடையும் நாட்கள் வெகுதூரத்தில் அல்ல.
நான் மரணிக்கினும் எனது ஆத்மா கூட இந் நன்றியை மறவாதிருக்கும். மேலும் தமிழ் மக்களின் அதிகாரம் பெற்று பொறுப்பை நிறைவேற்ற இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இத்தால் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

A.M.K.தில்லைமோகன் (OMOS) (4014)

# நன்றி கூறுகின்றேன்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் தாயகம் தேசியம், தன்னாட்சி உரிமை கோரிக்கையை வலியுறுத்தியும் எமது அபிவிருத்தியை நாமே திட்டமிட்டு செயற்படவேண்டுமென நினைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களித்தமைக்கும் இக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி சார்பாக போட்டியிட்ட அனைவரையும் தந்தை செல்வா வின் பேரால் வெற்றிபெற வைத்தமைக்கும் குறிப்பாக கட்சி ரீதியிலும் மாநகர சபையிலும் எனது அரசியல் செயற்பாடுகளை அங்கீகரித்து எனக்கு வாக்களித்தவர்களுக்கும் என்னை விமர்சித்ததன் மூலம் மக்கள் மத்தியில் நான் பிரபலமாவதற்கு உதவியவர்களுக்கும் என்னோடு கூட இருந்து எனது வெற்றிக்காக உழைத்த தொண்டர்கள் கட்சியின் ஆதரவாளர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும் எனது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


எதிர்காலத்தில் பின்தங்கிய மக்களின் தேவைகளை கண்டுணர்ந்து அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கும் தமிழ் மக்களின் இனவிடுதலைக்காக சகலரையும் ஒன்றிணைத்து அறவழியில் போராட ஊக்கமளிக்கவும் எனது பதவிக் காலத்தை பயன்படுத்துவேன் எனவும் உறுதி கூறுகின்றேன்.

**அரியகுட்டி பரஞ்சோதி**
**இலங்கை தமிழரசுக் கட்சி,**
**வடமாகாண சபை உறுப்பினர்.** (4018)

## 5ம் ஆண்டு நினைவுநாள்

மலர்வு 1981 - 11 - 14

உதிர்வு 2008 - 09 - 21



**சண்முகலிங்கம் ரமேஸ்**
(4-ம் வட்டாரம் முள்ளியவளை)

விண் ஏகாமல் இருப்ப தென்பது
சாத்தியமில்லைத்தான் – ஆனால்
இப் பூவுலகில் நீ வாழாமல் போனதேனோ?
அன்பு என்னும் வெள்ளத்தால்
உள்ளமெல்லாம் நீ நிறைந்த ரமேஸ்
காலமெல்லாம் எம் மனதில் நீ வாழ்வாய்

உன்பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதரர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.
(C-4907) தகவல் – குடும்பத்தினர் –


Digital **இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுகள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(C-4902)

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062


## ரிஷி தொண்டுநாத சுவாமிகள்

(ஹாவாய்த் தீவு, அமெரிக்கா)

**51ஆவது பிறந்ததின வாழ்த்துக்கள் 25.09.2013**



தான் என்ற தலைக்கிரீடம்
அணியாதிருந்தாய்
தண்மதியாய் என்றும் நீ ஒளிர்வாய்
ஏழைகளின் நண்பனாய்
நலிவுற்ற மக்களின் தோழனாய்
முகம் பாராமலே வாரி இறைக்கும்
எளிமையானவரே
வீதியுலாவுக்காக் வெளியில்
வராத விக்கிரகமே
வாழ்க வளமுடன்
வாழ்த்துகிறேன் இந்நாளில்.

Best Wishes

– வாழ்த்தும் து.சுதர்சன்

## இன்று ஒரு தகவல்

### கொட்டாவி

நீங்கள் சிரித்தால் இந்த உலகமும் சிரிக்கும்! என்று சொல்வதுண்டு. அதே மாதிரி இன்னொன்றும் சொல்லலாம்.

"நீங்கள் கொட்டாவி விட்டால் இந்த உலகமும் கொட்டாவி விடும்!" என்று. ஆமாம்! இது உண்மை தான்!

இது ஒரு தொற்று வியாதி மாதிரி...

ஒருவர் வாயைத் திறப்பதைப் பார்த்தால் நமக்கும் ஒரு உந்துதல் வந்து கொட்டாவி விடுகிறோம்.

"இந்தக் கொட்டாவியைப் பற்றி நினைத்தாலே கொட்டாவி வந்து விடுகிறது" என்கிறார் Dr. Provine என்ற ஆராய்ச்சியாளர்.

ஒரு சுவடத்தில் பலரிடம் கொட்டாவி சம்பந்தமான விடயத்தைக் கொடுத்து படிக்கச் சொல்லியிருக்கிறார்.

அப்படி படிக்கும் போதே 75 சதவீதமானோர் கொட்டாவி விட்டார்களாம். மற்ற விடயத்தைப் படிக்கும் போது 20 சதவீதமானோர் தான் கொட்டாவி விட்டார்களாம்!

இந்த தகவலை கேட்கும் போது எத்தனை பேர் கொட்டாவி விடுகிறார்களோ? யாருக்குத் தெரியும்.

கொட்டாவியைப் பற்றி பொதுவாக அனைவரும் நம்பிக் கொண்டிருப்பது என்ன தெரியுமா? இரத்தத்தில் இருக்கும் ஒட்சிசனை அதிகரிப்பதற்கோ அல்லது இரத்தத்திலிருந்து மேலதிக காபனீரொட்சைட்டை வெளியேற்றவோ உண்டான சுவாசப் பயிற்சிதான் கொட்டாவி என்று எல்லோரும் நினைக்கிறார்கள்.

ஆனால் Dr. Provine உம் இன்னொருவரும் இதைப் பற்றி செய்த ஆராய்ச்சியில் இந்தக் கருத்துஅவ்வளவு பொருத்தமானதாக இல்லை என்கிறார்கள்.

ஏனெனில் சுத்தமான ஒட்சிசனை சிலபேர் சுவாசிக்கிற மாதிரி செய்து பார்த்ததில் அவர்களெல்லாம் அதிகமாக கொட்டாவி விடுகிறார்களாம்.

அப்படியானால் ஒட்சிசன் தேவைக்காக அவர்கள் கொட்டாவி விடுகிறார்கள் என்று நினைப்பது தவறு தானே!

மனிதன் பிறந்து 5 நிமிடத்திலிருந்து இதை ஆரம்பித்து விடுகிறான்.

அதுமட்டுமல்ல மிருகம்–பறவை–மீன்களெல்லாம் கூட கொட்டாவி விடுகிறது.

மனிதன் தூண்டுதல் உணர்வு (stimulation) குறைவாக இருக்கும் போது கொட்டாவி விடுகிறான்.

முக்கியமான ஒன்று நடக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்பில் மிருகங்கள் கொட்டாவி விடுகிறது!

மிருகங்களை பொறுத்தவரை, கொட்டாவி விடும்போது இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம் என்பன அதிகமாவதால் இது அந்த மிருகத்தை செயற்பட தயார் நிலைக்கு கொண்டு வருகிறது!

மனிதன்–சாவகாசமான நிலையில் கொட்டாவி விடுகிறான்.

சிங்கம்–சாப்பாட்டு நேரம் நெருங்கும் போது கொட்டாவி விடும்.

slamese fighting fish கூட்டமாக இருக்கும் போது கொட்டாவி விடும். முழித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் ஒரு உந்துதலை கொடுப்பதற்காக உடம்பு செய்யும் உதவி கொட்டாவி!

சில பிள்ளைகளுக்கு பரீட்சை எழுத உட்கார்ந்தால் முதலில் கொட்டாவிதான் வருகிறது. அதன்பின்னர் தான் Answer வருகிறது.

கொட்டாவியைப் பற்றி இதுதான் உண்மை என்று உடல் ரீதியான விளக்கத்தை இன்னமும் கொடுக்க முடியவில்லை! ஏனெனில் அது எந்த நேரத்தில் வரும் என்று உறுதியாக சொல்ல முடியவில்லை.

அடிக்கடி கொட்டாவி வருகிறது என்று ஒருவர் டாக்டரிடம் போனார்.

டாக்டரும் சோதித்து விட்டு வாயைத் திறக்கச் சொல்லி மருந்தை வாயில் போட்டு மூடிக் கொள்ளுங்கள் என்றார். அதற்குள் டாக்டர் வெளியே போய்விட்டு வந்தார்.

மருந்தை விழுங்க வாயைத் திறந்தவர் மூடவேயில்லை! "ஏன் சேர்... பெரிய கொட்டாவியாக வருகிறதா?" என்று கேட்டார் டாக்டர். "அதற்கு இவர் கொட்டாவி எப்பொழுதோ போய்விட்டது... இப்ப நான் வாயைத் திறந்தது உங்கள் கையிலுள்ள பில்லைப் பார்த்து விட்டு!" என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

## வடக்கு கிழக்கில் காணாமற் போனவர்கள் குறித்து முறைப்பாடுகளை பதிவு செய்யலாம்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமற் போனவர்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பில் பொது மக்கள் சென்றடையும் வகையான சிலஅறிவித்தல்கள்மேற்படிஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதியான மக்ஸ்வெல் பராக்கிரம பரணகமவின் தலைமையில் திருமதி திமிங்கு படதுருகே பிரியந்தி சுரஞ்சனா வித்தியா ரத்ன, திருமதி மனோ இராமநாதன் ஆகியோர் அங்கத்துவம் வகிக்கும் இவ் ஆணைக்குழு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் காணாமற்போன, கடத்தப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறு கடத்தப்பட்டு காணாமற் போனமையை நிரூபிக்க போதுமான சான்றுகள் தொடர்பிலும் அவ்வாறு கடத்தப்பட்ட, காணாமற் போன சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் அவர்கள் தற்போது தங்கியுள்ள இடங்கள் தொடர்பிலும் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர்.

மேலும் மேற்படி கடத்தல், காணாமல் போன சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக கருதுவதற்கான சான்றுகள், அவ்வாறு பொறுப்புக் கூற வேண்டுமென அடையாளம் காட்டப்பட்டவருக்கு எதிராக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்தும் இவ் ஆணைக்குழு ஆராயவுள்ளது.

மேற்குறிப்பிட்டவற்றோடு இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறுவதை தடுப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலும் மேற்படி கடத்தப்பட்ட, காணாமற் போனவர்களது பெற்றோர் அல்லது வாழ்க்கைத்துணை மற்றும் தங்கி வாழ்வோருக்கு அரசாங்கத்தின் ஒரு பொறுப்பென்ற வகையில் வழங்கப்படவேண்டிய நிவாரணங்கள் தொடர்பிலும் இவ் ஆணைக்குழு ஆராயவுள்ளது.

இதேவேளை மேற்குறிப்பிட்ட விடயங்கள்தொடர்பில்முறைப்பாடுகள் செய்யப் படுவதாயின் எதிர்வரும் ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், காணாமற் போனவர்களின்முறைப்பாடுகளை விசாரணைசெய்யும்ஆணைக் குழு, இல. 9/8, சுரனிமல இடம், கொழும்பு–06 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் எனவும் முறைப்பாடுகளை தமிழிலோ, சிங்களத்திலோ அல்லது ஆங்கிலத்திலோ வழங்க முடியும் எனவும் மேற்படி காணாமற் போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழு அறிவித்துள்ளது.

மேலும் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் யாவும் பரிசீலனை செய்யப்பட்ட பின் முறைப்பாட்டாளர்கள் வாய்மொழி விசாரணைக்காக அழைக்கப்படுவதுடன் முறைப்பாட்டாளர் களின் வசதிக்கேற்ப மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், கிராம சேவையாளர் அலுவலகம் அல்லது வேறு பொருத்தமான ஒரு இடத்தில் விசாரணை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாகவும் அதற்கான திகதி மற்றும் இடம் என்பன உரிய காலத்தில் அறிவிக்கப்படும் எனவும் இரகசியமான முறையில் சாட்சியளிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைஆணைக் குழுச் சட்டத்தில் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இந்த ஆணைக்குழுவிற்கும் பொருந்தும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

## துடுப்பாட்டப் போட்டி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் சிற்பி து.ஜெயரத்தினத்தின் 100 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மகாஜனக் கல்லூரியில் நடத்தப்படும் விளையாட்டு நிகழ்வுகளில் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டப் போட்டி இன்று புதன்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த முன்னணி பாடசாலை அணிகள் பங்குபற்றவுள்ளதாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் கு.வேல்சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலை அணிகளை குறித்த நேரத்துக்கு வருகை தந்து போட்டிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-7-23)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-140 | 110 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 |
| தக்காளி | 100 | 80 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 50 |
| கோவா | 60 | 70 | 80 |
| கரட் | 60 | 40 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 90-110 | 200 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 100 |
| பாகற்காய் | 100 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 20 | 40 | 60 |
| லீக்ஸ் | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 10 | 10 | 40 |
| கறிமிளகாய் | 80 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 150 | 140 | 160 |
| போஞ்சி | 120 | 110 | 140 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 30 |
| தேசிக்காய் | 400 | 320 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 40-50 |
| இராசவள்ளி | 100 | 60 | 120 |

## இராசி பலன்

25.09.2013
(புரட்டாதி 09, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 7.17 மணிவரை
ரோகிணி பின்னிரவு 1.31 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
கபில சஷ்டி

**மேடம்** இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழும் வாய்ப்புண்டு, துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்** தொழில் நலன் கருதி பயணமொன்று உருவாகலாம், பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரை திடீரென சந்திக்கலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**மிதுனம்** புதிய நட்பால் பொருள் விரயம் ஏற்படலாம், வியாபாரத்தில் புதிய மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, வேலைச்சுமை கூடும், சயன சுகக் குறைவான நாள்.

**கடகம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், முன்னேற்றத்துக்கு வழிகாட்டியவர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள், சிறப்பான நாள், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும்.

**கன்னி** நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வு நீங்கும்,பாக்கிகள் வசூலாகலாம், அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, சேமிப்புகள் கரையலாம், மனதில் இனப்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** பகல் இரவாக பாடுபட்டதற்குரிய பலன் கிடைக்கும், பிறரிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள் மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம், யோகங்கள் வந்து சேர யோசித்துச் செயற்பட வேண்டிய நாள்.

**தனுசு** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சி வெற்றிதரும், வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும், உடல் நலம் சீராகும், பிறர் உதவியுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** தாய்வழி ஆதரவு பெருகும், வாகனத்தை பழுது பார்க்கும் எண்ணம் மேலோங்கும், மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**மீனம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், பொதுநல ஈடுபட்டால் புகழ் பெறுவீர்கள், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், சகோதர ஒற்றுமை பலப்படும்.

வளவன்

# தண்டிக் குளத்தை புனரமைக்குக

(கரணவாய்)

கரவெட்டி மத்தணி பகுதியிலுள்ள தண்டிக் குளத்தைப் புனரமைத்து தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


மத்தணிக் கிராமத்திலுள்ள சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தண்டிக் குளத்தையே பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நீர்வற்றி குறைந்தளவு நீருடனேயே தற்பொழுது இக்குளம் காணப் படுகின்றது.

ஏற்கனவே, குளம் புனரமைக்கப்பட்டி ருந்த போதிலும் அது தற்போது சேதமடைந் துள்ளது.

அடுத்துவரும் மழைகாலத்திற்கு ஏற்ப குளத்தை ஆழமாக்கி பாதுகாப்பு எல்லைக் கட்டுகளைப் புனரமைப்பதனூடாக இக்குளத்தில் அதிகளவு நீரைப் பெறமுடியும் என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே, இப் பிரதேசத்தினருக்கு தேவைப் படுகின்ற மேற்படி குளத்தை புனரமைத்து தரு மாறு கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையினரிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-60)




# 28 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கைக்கு மானிய விலையில் உர விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்து விவசாயிகளுக்கு 28 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்ச்செய்கைக்கான உரம் மானிய விலையில் வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில்,

இந்த வருடத்தில் யாழ். மாவட்டத்தில் 28 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கைக்கான உரம் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை கமநல சேவைகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இதன்படி யாழ். மாவட்டத்தில் 15 கமநல சேவைகள் திணைக்களங்களின் ஊடக உரம் களஞ்சியப்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலும் யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி பகுதியில் 6 ஆயிரத்து 400 ஏக்கர், கைதடிப் பகுதியில் 4ஆயிரத்து 150, நல்லூர் பகுதியில் 727, வேலணையில் 420, புங்குடுதீவில் 175, தொல்புரத்தில் 3 ஆயிரத்து 210, கீரிமலையில் 740, உடுவிலில் 590, புத்தூரில் ஆயிரத்து 100, உரும்பிராயில் ஆயிரத்து 170, புலோலி யில் 500, அம்பனில் ஆயிரத்து 480, காரை நகரில் ஆயிரத்து 100, சண்டிலிப்பாயில் 2 ஆயி ரத்து 550, கரவெட்டியில் 3 ஆயிரத்து 600 ஏக்கர் நிலப்பரப்புகளிலும் மேற்கொள்ளப்பட வுள்ள நெற்பயிர்ச் செய்கைக்கான உரம் மானிய விலையில் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# விதை நெற்களை தேடி அலைச்சல்

(சாவகச்சேரி)

பழைய இன நெல் வகையான மொட் டைக் கறுப்பன், பெருவெள்ளை போன்ற விதை நெற்களை தென்மராட்சி பிரதேச விவ சாயிகள் தேடி அலைகின்றனர்.

மேற்படி இன நெல் தாழ்ந்த வயல் பிர தேசங்களில் சிறப்பான விளைச்சலைக் கொடுக்கக் கூடியது எனவும் விவசாயிகள் சுட்டிகாட்டியுள்ளனர்.

எனவே, விவசாயத் திணைக்களத்தினர் இவ் இன விதை நெற்கள் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென தென்மராட்சி விவசாயி கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-29)

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

(சாவகச்சேரி)

தேசிய உள்ளூராட்சி வாரதினத்தை முன் னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினரால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை பல்வேறு நிகழ் வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, முதலாம் நாளான 9 ஆம் திகதி புதன்கிழமை உதய சூரியன் கிராமத்தில் நடமாடும் மருத்துவ முகாமும் நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கும் ஆதனவரி அறவீடு தொடர்பான நடமாடும் சேவையும் இடம்பெறவுள்ளன.

மறுநாள் 10 ஆம் திகதி வியாழக்கிழமை சபையின் எல்லைக்குட்பட்ட கிராமங்களில் ஆதன வரி அறவீடு தொடர்பான விழிப்புணர்வு நடமாடும் சேவையும் மறுநாள் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் பங்குபற்றுதலுடன் சிரமதான நிகழ்வுகளும் சபை உத்தியோகத் தர்களுக்கு மருத்துவ பரிசோதனையும் இடம் பெறவுள்ளன.

12 ஆம் திகதி சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மகளிர் அமைப்புகளுடன் நகராட்சி மன்றத்தின் செயற்பாடுகள், சேவைகள், சோலைவரி அறவீடு தொடர்பான கலந்துரையாடலும் மறுநாள் மரநடுகை, டெங்கு நோய் தடுப்பு பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு, வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிக்கும் நோக்கிலான பயன்தரு மரங்கள் வழங்கல், விவசாய கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறவுள் ளன.

தொடர்ந்து ஆறாம் நாள் புத்தக கண் காட்சியும் விற்பனையும் பாடசாலை மாணவர் களுக்கிடையிலான போட்டிகள், வீட்டில் சிறந்த நூலகத்தை தெரிவு செய்தல், உணவ கம் தெரிவு செய்தல், முன்பள்ளி ஆசிரியர், பெற்றோர் தொடர்பான கலந்துரையாடல், இறுதி நாளன்று சபை எல்லைக்குட்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டி கள், சபை அலுவலர்களுக்கிடையிலான போட்டிகள், உள்ளூராட்சி வார சிறப்பு மலர் வெளியீடு, பரிசில் வழங்கல் என்பனவும் நடை பெறவுள்ளன.

உள்ளூராட்சி வாரம் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை கொண்டாடப்படவிருந்த போதிலும் அது மாகாண சபைத் தேர்தலினால் பிற்போடப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9-29)

# நொருக்கப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள்

(தெல்லிப்பழை)

அளவெட்டி அலுக்கச் சந்தி பகுதியின் வயல் வெளியில் டிஸ்கவரி -135 ரக மோட் டார் சைக்கிள் அடித்து நொருக்கப்பட்ட நிலை யில் வயலுக்கு சென்ற விவசாயிகளால் நேற் றுக் காலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவ தாவது,

NP WB 3787 என்ற இலக்கத் தகட் டினைக் கொண்ட மோட்டார் சைக்கிள் அடித்து நொருக்கப்பட்டு வயல் வெளியிலுள்ள கிணறுக்கு அருகாமையில் காணப்பட்டுள் ளது.

இதனையடுத்து, வழங்கப்பட்ட தகவலின் படி, சம்பவ இடத் திற்கு வந்த பொது மக்களும் தெல்லிப்பழை பொலிஸாரும் கிணற்றுக்குள் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் இருக்க லாம் என சந்தேகம் கொண்டு கிணற்றை இறைத்துள்ளனர். ஆயினும் எதுவித தட யமும் கிடைக்கவில்லை.

மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகட் டினை கொண்டு மோட்டார் பதிவுத் திணைக் களத்திடம் தொடர்பையேற்படுத்திய போது, அது யாழ்ப்பாணம் நவீன சந்தை பகுதியைச் சேர்ந்தவராது மோட்டார் சைக்கிள் என தெரி விக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் களின் விபரம் இதுவரை கிடைக்கவில்லை தெல்லிப்பழை பொலிஸார் நொருக்கப்பட்ட மோட் டார் சைக்கிளை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளதுடன் மேலதிக விசார ணைகளை தொடரவுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (அ-6-9-28)


# புகையிரத இணைப்பு பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

புகையிரதத்தில் பயணம் செய்யும் யாழ்.குடா நாட்டு பயணிகளின் நன்மை கருதி யாழ்.மத் திய பேருந்து நிலையத்திலிருந்தும் பருத்தித் துறை பேருந்து நிலையத்திலிருந்தும் கிளி நொச்சி புகையிரத நிலையம் வரை பயணிகள் பயணம் செய்வதற்கு வசதியாக இலங்கைப் போக்குவரத்து சபையால் புகையிரத இணைப்பு பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி யாழ்.பேருந்து நிலையத்திலி ருந்து கிளிநொச்சி புகையிரத நிலையம் வரை அதிகாலை 4மணி, முற்பகல் 11.45, நண்ப கல் 12.15 , மாலை 6.15 ஆகிய நேரங்களிலும் கிளிநொச்சி புகையிரத நிலையத்திலிருந்து யாழ்.பேருந்து நிலையம் வரை அதிகாலை 4.30 மணி, நண்பகல் 12.15, பிற்பகல் 2 மணி ஆகிய நேரங்களிலும் பேருந்துகள் பயணிக்கவுள்ளன.

பருத்தித்துறை பேருந்து நிலையத்திலி ருந்து கிளிநொச்சி புகையிரத நிலையம் வரை முற்பகல் 11 மணி, மாலை 6 மணிக்கும் கிளி நொச்சி புகையிரத நிலையத்திலிருந்து பருத் தித்துறை பேருந்து நிலையம் வரை அதி காலை 4.30 , நண்பகல் 12.15 ஆகிய நேரங் களிலும் இ.போ.ச. பேருந்து சேவை இடம் பெற வுள்ளதாக கோண்டாவில் பிரதான பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (அ-7)



வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆட்சியமைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் முதலவர் க.வி.விக்னேஸ்வரனுடன். (படம்:- எஸ்.ஆர். கரன்)

# மக்களின் தேவைகளை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுப்பேன் -நாமல்

வடமாகாண சபைத் தேர்தலில் வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்களித்து அரசாங்கத்துக்கு ஆதரவளித்துள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு பாராளுமன்ற உறுப்பினரும் இளைஞருக்கான நாளைய அமைப்பின் தலைவருமான நாமல் ராஜபக்ஷ நன்றி தெரிவித்துள்ளார்.

வடக்கை அபிவிருத்தியில் கட்டியெழுப்பும் வடக்கின் வசந்தம் அபிவிருத்தி கருத்திட்டத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் மேற்பார்வையாளராக தாம் செயற்பட்டு வருவதாக கூறிய அவர், இந்த நடவடிக்கைகளில் தமக்கும் அரசாங்கத்துக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்கிய முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கும் அவர் தமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கை துரித அபிவிருத்தி செய்வதற்கென திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் தலைவராவார்.

மஹிந்த சிந்தனை கொள்கையில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் வடக்கு மாகாண சபையை மீள ஸ்தாபித்து வடக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை துரிதமாக பலப்படுத்துவதற்கும் நிலையான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள வடக்கின் வசந்தம் அபிவிருத்தி செயற்றிட்டதைப் பலப்படுத்தும் வகையில் அந்த மாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார். (அ-7)

# தேர்தல் சட்டங்களை மீறிய 180 பேர் கைது

(கொழும்பு)

வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தலின் போது தேர்தல் சட்டங்களை மீறிய 180 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் சட்டங்களை மீறிய சம்பவங்கள் தொடர்பில் 288 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் , பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க சிறிவர்த்தன குறிப்பிட்டார்.

அதிகளவிலான 96 முறைப்பாடுகள் மத்திய மாகாணத்தில் பதிவாகியுள்ளன.

இதேவேளை வாக்களிப்பு நிறைவடைந்ததன் பின்னர் நேற்றுமுன்தினம் மாலை வரை பொலிஸ் தேர்தல் நடவடிக்கை பிரிவுக்கு 3 முறைப் பாடுகள் கிடைத்துள்ளதாகவும் இவற்றில் 2 முறைப்பாடுகள் அச்சுறுத்தல் சம்பவம் தொட ர்பிலும் மற்றொன்று வீடொன்றின் மீது பட்டாசு எறிந்தமை தொடர்பாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ-7)

# சட்டவிரோதமாக ஆஸி செல்ல முற்பட்ட 4000 பேர் கைது

சட்டவிரோதமாக கடல்மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்கு பயணிப்பதற்கு முயற்சித்த நான்காயிரத்திற்கும் அதிகமானவர்கள் இது வரை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் பயணித்த 80 படகுகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையின் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

2010 முதல் இதுவரையான காலப்பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கடற்படையினரால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை குற்றப் புலனாய்வுத் திணை க்களத்தினர் இது தொடர்பான விசாரணை களை முன்னெடுத்து சட்டவிரோதமாக அவுஸ் திரேலியாவுக்கு ஆட்களை அனுப்பும் நடவ டிக்கையில் ஈடுபட்ட சிலரைக் கைது செய் துள்ளனர். மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவின ரால் இது தொடர்பில் பிரபல வர்த்தகர் ஒருவரும் கடற்படை யின் சில உறுப்பின ர்களும் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-7)

# விக்ரோறியா கல்லூரியின் பரிசளிப்பு விழா

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திறந்த வெளியரங்கில் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பொதுத் திறைசேரி முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களப் பணிப்பாளர் விக்டோறியன் ச.க. குசலகுமாரன், உள்நாட்டு இறைவரித் திணைக்கள வரி மதிப்பாளர் திருமதி ராதாகுசலகுமாரன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் விக்டோறியன் பொ. ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். நிறுவுநர் நினைவுப் பேருரையை மகரகம ஆசிரியர் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் விக்டோறியன் கலாநிதி ந.ரவிச்சந்திரன் ஆற்றவுள்ளார். (அ-7)


உங்கள் முகம். மேனி. பளபளக்கவேண்டுமா?
எரி காயங்களினால் ஏற்பட்ட தழும்புகள் மாறவேண்டுமா?
இன்றே பாவியுங்கள்

'றோயல் ஒலிவ் ஒயில்'
Product of Spain

உணவுத் தேவைகளுக்கு ஏற்ற சுத்தமான ஒலிவ் ஒயில்

ஏக விநியோகஸ்தர்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

Re packed By :
**Royal Industries**
No.221/1, Adamally Building,
Wolfendhal Street,
Colombo - 12, T.P: 0777277670
அனைத்து பாமசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (சி/4169)






கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1974 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 63<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L UK Citizen<br>தொ.இ:B2344 | பிறப்பு: 1988 இந்து (V)<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா :26<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA (Final) Following Fisheries<br>தொ.இ:G2357 |
| பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 3<br>கி.பா:4.5<br>உயரம்: 5'8"<br>தகைமை/ தொழில்: College (Canada) (Canada citizen)<br>தொ.இ:B2345 | பிறப்பு: 1988 இந்து (V)<br>நட்சத்திரம்:பூசம் 4<br>கி.பா :48<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:CIMA Qualified Accountant<br>தொ.இ:G2361 |
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா: 72.5 செவ். 1இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: (BBA) காணி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ:B2346 | பிறப்பு: 1980 இந்து (செட்டி)<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா :29.5<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:HNDA National Diploma in Accountancy வரவேற்பாளர்,காசாளர் (தனியார்)<br>தொ.இ:G2362 |
| பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா :11, சூரி.,செவ். 5இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: வைத்தியர் (M.D)<br>தொ.இ:B2348 | பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா:28 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Bsc in Business Com. வரவேற்பாளர் (தனியார்)<br>தொ.இ:G2364 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



# நன்றி கூறுகின்றேன்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் தாயகம் தேசியம், தன்னாட்சி உரிமை கோரிக்கையை வலியுறுத்தியும் எமது அபிவிருத்தியை நாமே திட்டமிட்டு செயற்படவேண்டுமென நினைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களித்தமைக்கும் இக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி சார்பாக போட்டியிட்ட அனைவரையும் தந்தை செல்வா வின் பேரால் வெற்றிபெற வைத்தமைக்கும் குறிப்பாக கட்சி ரீதியிலும் மாநகர சபையிலும் எனது அரசியல் செயற்பாடுகளை அங்கீகரித்து எனக்கு வாக்களித்தவர்களுக்கும் என்னை விமர்சித்ததன் மூலம் மக்கள் மத்தியில் நான் பிரபலமாவதற்கு உதவியவர்களுக்கும் என்னோடு கூட இருந்து எனது வெற்றிக்காக உழைத்த தொண்டர்கள் கட்சியின் ஆதரவாளர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும் எனது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எதிர்காலத்தில் பின்தங்கிய மக்களின் தேவைகளை கண்டுணர்ந்து அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கும் தமிழ் மக்களின் இனவிடுதலைக்காக சகலரையும் ஒன்றிணைத்து அறவழியில் போராட ஊக்கமளிக்கவும் எனது பதவிக் காலத்தை பயன்படுத்துவேன் எனவும் உறுதி கூறுகின்றேன்.

**அரியகுட்டி பரஞ்சோதி**
**இலங்கை தமிழரசுக் கட்சி,**
**வடமாகாண சபை உறுப்பினர்.**

(4018)

# அடிப்படை வசதிகளின்றி அல்லலுறும் மக்கள்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் ஏ9 வீதிக்கு கிழக்குப் புறமாகவுள்ள கல்மடு, நாவல்நகர், புதுக்காடு, கட்டைக்காடு ஆகிய இடங்களில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கென அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் அடிப்படை வசதிகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**

இரணைமடுவில் அமைந்துள்ள விமான நிலையத்திற்கான மின்சாரம் கொடுக்கப்பட்டுள்ள நிலையில்



இராமநாதபுரம் கிழக்கில் உள்ள ஒரு பகுதிக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு அருகாமையில் உள்ள மேற்குறித்த கிராமங்களுக்கு மின்சார வசதிகள் இல்லை. குடிநீர் வசதியைப் பெறுவதற்கு கிணறுகள் இல்லை.

இங்குள்ள வீதிகள் எவையும் புனரமைப்பு செய்யப்படாமையால் போக்குவரத்து செய்யமுடியாத நிலையும் உள்ளது.

இரண்டு ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்ற இந்தக் கிராமங்களில் வீட்டுத்திட்டங்கள் உரிய முறையில் வழங்கப்படவில்லை.

வீட்டுத் திட்டம் வழங்கப்படும் சில இடங்களில் புள்ளிவழங்கல் முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

இதனால் தடுப்பு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட இரு அங்கத்தவர்களைக்கொண்ட இளம்குடும்பங்கள், வயோதிப தம்பதியினர், தனிநபர் 19 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளைக்கொண்ட குடும்பங்கள் ஆகியவற்றுக்கு இந்தப்புள்ளி வழங்கும் நடைமுறையினால் வீட்டுத் திட்டம் கிடைக்கவில்லை.

எனவே மழைகாலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் இவர்களுக்கான வீட்டுத்திட்டத்தை விரைவில் வழங்க வேண்டுமெனவும் அவ்வாறு உடனடியாக வழங்காத பட்சத்தில் தற்காலிக வீடுகளையாவது நல்லமுறையில் அமைத்து ஏனைய வசதிகளையும் ஏற்படுத்தி தரவேண்டுமென மேற்குறித்த கிராம மக்களும் பொது அமைப்புக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-254)

# பூநகரி-கிளிநொச்சிக்கு இ.போ.ச.பேருந்து சேவை

பூநகரி- கிளிநொச்சி பயணிகளின் நலன் கருதி கிளிநொச்சியில் இருந்து பரந்தன் ஊடாக பூநகரிக்கு கிளிநொச்சி அரச பேருந்து சாலையில் தினமும் மூன்று பேருந்து சேவைகள் கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இதன்மூலம் கிளிநொச்சி மாவட்ட செயலகம், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி கல்வி திணைக்களம் ஆகியவற்றிற்கு செல்லும் பெரும் தொகையான மக்களின் சிரமங்கள் நீங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இச் சேவைகள் தினமும் கிளிநொச்சியில் இருந்து பூநகரிக்கு காலை 9.30 மணி, பி.ப. ஒரு மணி, பி.ப. 3.30 மணி ஆகிய நேரங்களில் ஆரம்பிக்கின்றன.

மீண்டும் பூநகரியில் இருந்து கிளிநொச்சிக்கு தினமும் காலை 8.15 மணி, மு.ப.11 மணி, பி.ப. 2.15 மணி ஆகிய நேரங்களில் இச்சேவை இடம்பெறுகின்றது.

இச்சேவையைவிட கிளிநொச்சி சாலையில் இருந்து கௌதாரி முனைக்கு பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பாடசாலை சேவையும் இடம்பெறுகின்றது. (ம-84)

# மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுங்கள்

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்ட கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கோவிற்குடியிருப்பு கிராமத்தில் அமைந்துள்ள 24 வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்படாமையால் அப்பகுதி மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.



கடந்த 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மேற்படி கிராமத்தில் 74 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் 24 குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் மின்சாரத்தின் மூலம் செயற்படும் அனைத்து வேலைகளும் ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகின்றன.

இங்குள்ள பாடசாலை மாணவர்கள் மின்சாரம் வழங்கப்படாமையால் குப்பி விளக்கு களிலேயே தமது கல்வியைத் தொடர வேண்டிய நிலை உள்ளது.

எனவே, உரிய வர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்து மின்சாரம் வழங்கப்படாத குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்க முன்வர வேண்டுமென பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

# பணமோசடி செய்த நபருக்கு விளக்கமறியல்


(முல்லைத்தீவு)

அவுஸ்திரேலியாவுக்கு படகில் அனுப்புவதாக கூறி 6 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவை மோசடி செய்த முல்லைத்தீவு கள்ளப்பாட்டைச் சேர்ந்த நபர் ஒருவரை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் தாம் நேரடியாக பணம் கொடுத்ததாகவும் பின்னர் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பாமல் பணத்தை தமது தேவைக்கு பயன்படுத்தி விட்டதாகவும் முறைப்பாட்டாளர்கள் மன்றில் தெரிவித்தனர். (அ)




# புனரமைக்கப்படாத நிலையில் பூநகரி பொதுமயானம்



(பூநகரி)

பூநகரி நகர்ப்பகுதியில் இரு ந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பூநகரி பொது மயானம் காட்டுப் பகுதியில் இரு ப்பதுடன் 40 வருட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் பற்றைகள் நிறைந்து காணப்ப டுவதால் இறுதி கிரியைக்கு மயாணம் செல்வோர் பெரும் அசௌகரியங்களை சந்திப்பதாக பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இம்மயானத்தில் மடம், சுற்று வேலிஎன்பன அமைக்கப்படவில்லை.

குறிப்பாக கிணறு அமைக்கப்படாமையால் தகனக்கிரியைகளுக்கு அருகில் உள்ள சிறுகுளத்தில் நீரைப் பெறவேண்டிய நிலையுள் ளது.

கோடை காலத்தில் குளநீர் வற்றியுள்ள நிலையில் வீட்டிலிருந்து நீரை எடுத்துச் செல்ல வேண்டிய அவல நிலையும் உள் ளது.

மயானத்திற்கு செல்லும் மணற்பாதை பற்றைக் காடாக காணப்படுவதால் மயானத்திற்கு செல் வோர் பற்றைகளை வெட்டி அப் புறப்படுத்தி விட்டே செல்வதை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன் வாகனங்கள் எது வுமே மயானத்திற்கு செல்ல முடி யாத நிலையுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக உரியவர்களிடம் பல தடவை முறை யிட்டும் எதுவிதமான நடவடிக் கையும் முன்னெடுக்கப்படவி ல்லை என சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளதுடன் இவ்விடயத்தில் கவனமெடுக்கு மாறு உரிய தரப்பினருக்கு கோரி க்கை ஒன்றையும் முன்வைத்துள்ளனர். (ம-84)

# தமிழ் எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டி

(குருமன்காடு)

ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் தனது பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி இலங்கை வாழ் எழுத்தாளர்களை முன்னிலைப்படுத்தி சிறுகதை போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இலங்கையில் வாழ்கின்ற எழுத்தாளர்களே பங்குபற்ற முடியும். வயதெல்லைகள் கிடையாது. ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே முழுப் பொறுப்புமாவர். சிறுகதை சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும். முன்னதாக ஊடகங்களில் வெளிவந்திருக்கக் கூடாது. சிறுகதைகள் ஏ-4 தாள்களில் கணனியில் பதிவு செய்யப்பட்டு 5,6 பக்கங்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும். சிறுகதைகளை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் mr. v.sivarasa, amwildhovel, 47 249,duisburg, germany. p.puththisikamani,mescheder str.19, 59846 sundern,germany என்ற முகவரிக்கோ அல்லது v.sivarajah @ arcor.de அல்லது ponmani @hotmail.de மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம். இப்போட்டியில் தேர்ந்தெடுக்கப்படும் முதல்மூன்று சிறுகதைகளுக்கு பணப் பரிசில், சான்றிதழ் வழங்கப் படும். முதலாவது பரிசாக 25 ஆயி ரம் ரூபாவும் இரண்டாவது பரிசாக 15 ஆயிரம் ரூபாவும் மூன்றாவது பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். மேலும் பன்னிரண்டு சிறுகதைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இலங்கை தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கங்களை வெளிக் கொணர்ந்து அவர்களை கௌரவிக்கும் முகமாக இச்சிறுகதை போட்டி நடைபெறவுள்ளது. தாயக வாழ்வியலை உலக மக்களுக்கு தெரியப்படுத்தும் நோக்கோடு இப்போட்டி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-250)

# பொதுநூலகம் அமைத்து தருமாறு கோரி கடிதம் அனுப்பி வைப்பு

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட புன்னை நீராவி கிராமத்தில் பொது நூலகம் ஒன்றை அமைத்து தரும்படி அப்பகுதி சிரேஷ்ட பிரஜைகள் குழு அரசாங்க அதிபர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ,கண்டாவளை பிரதேச செயலர் ஆகியோருக்கு கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள புளியம்பொக்கணை, புன்னை நீராவி, குமாரசாமிபுரம், நாதன்குடியிருப்பு, உழவனூர் ஆகிய கிராமங்களின்மையத்திலேயே புன்னை நீராவி கிராமம் அமைந்துள்ளது.

புன்னை நீராவி கிராமத்தில் பொது நூலகத்தை அமைத்தால் மேற்குறித்த கிராம மக்கள் பயன்பெறமுடியும்.

எனவே இக்கிராமங்களில் உள்ள மாணவர்களினதும் பொது மக்களினதும் நலன்கருதி ஒரு பொதுநூலகத்தை புன்னை நீராவி பகுதியில் அமைத்து தருமாறு கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். (ம-84)

# மரங்கள் வெட்டப்பட்டு கடத்தப்படுகின்றன

## மக்கள் சுட்டிக்காட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளை ஊடாக ஒட்டுசுட்டான் செல்லும் ஏ-34 பிரதான வீதியின் இருமருங்கிலும் உள்ள தேக்கங்காடுகளில் தேக்க மரங்கள் வெட்டப்பட்டு கடத்தப்படுவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இச்செயற்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இச்செயற்பாடு மூலம் பெறுமதியானவளங்கள் நாளுக்கு நாள் சுரண்டப்பட்டு வருகின்றன. இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் பாராமுகமாக இருப்பதற்கு காரணம் என்ன என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புவதோடு இது தொடர்பில் உடன்விரைந்து செயற்படுமாறு வேண்டுகோள் ஒன்றையும் அப்பகுதி மக்கள் முன்வைத்துள்ளனர். (ம-267)

# கட்சி தாவல்களுக்கு இனி இடமில்லையாம்

## பொன்சேகா இறுக்கம்

கட்சித் தாவல்களுக்கு இடமளிக்கப் போவதில்லை என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மேலும் கட்சியை சேர்ந்த ஐந்து பேர் இம்முறை மாகாணசபைத் தேர்தலில் வெற்றியீட்டியுள்ளனர்.

ஏதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் உறுப்பினர்கள் கட்சி மாறினால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வேட்பு மனுக்கள் கையொப்பமிடும் போதே இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே மனச்சாட்சிக்கு விரோதமான முறையில் மக்கள் ஆணையை கட்சி உறுப்பினர்கள் புறக்கணிக்க முடியாது. அவ்வாறு முயற்சித்தால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.(அ-5)

# கிழக்கில் பனிக்கட்டி மழை பொழியலாம்

(கொழும்பு)

கிழக்கு மற்றும் ஊவா மாகாணத்தில் பனிக்கட்டி மழை பெய்யக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

பனிக்கட்டி மழை மற்றும் இடி, மின்னல் தாக்குதல் இடம்பெறக் கூடிய சாத்தியமும் காணப்படுவதுடன் காற்றின் வேகம் மணிக்கு 60 கிலோ மீற்றராக காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை மேல், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் இடைக்கிடை மழை பெய்யக் கூடும் எனவும் அத்துடன் கடல் சற்று கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே மீனவர்கள் சற்று எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஆழியவளை J/431 பிரிவிலுள்ள கடற்கரையை அண்டிய பகுதியிலுள்ள கடற்கரைத் தாவரங்களும் மருத்துவ முக்கியத்துவமும்

மூலிகைத் தாவரங்களை கண்டல் தாவரங்கள், கண்டல் சார்ந்த தாவரங்கள், கடற்கரைத் தாவரங்கள் எனப் பல்வேறு பிரிவுகளாக பிரிக்கலாம். ஆழியவளை கடற்கரைப் பிரதேசத்தில் பின்வரும் வகையான மூலிகைத் தாவரங்கள் இனங்காணப்பட்டன. இவற்றின் மருத்துவப் பயன்கள் ஏராளமானவை.



இன்ங்காணப்பட்ட கடற்கரைத் தாவரங்களை நோக்கும் போது (Sea Coast Plants) பின்வருவன இனங்காணப்பட்டன. எழுத்தாணிப்பூண்டு, மணலிக் கீரை, கற்றாழை, குத்துக்காரன் சம்மட்டி, பட்டிப்பூ, வீழி, விராலி, நாவல், மருதோன்றி, முடிதும்பை, இம்பூரல், தாழை, உப்பிலாங்கொடி, அலரி, எருக்கு, புன்னை, சித்திரப்பாலாவி.

### எழுத்தாணிப்பூண்டு Launaea pinnatifida

பழமலக்கட்டு, சீதக்கருப்பு, கரப்பான், சொறிசிரங்கு இலைக்கட்டு இப் பூண்டைக் *கால் பலமெடுத்து* ஒன்றிரண்டாய்ச் சிதைத்துக் குடிநீரிட்டுக் கொடுத்துவர மேற்கண்ட நோய்கள் நீங்கும்.

### மணலிக் கீரை Gisekia molluginoides

இதனால் மார்புச் சளி அகலும், குடற் புழுக்கள் ஒழியும், வாத, கப நோய்கள் தீரும்.

ஆரோக்கியத்தை ஏற்படுத்தும் இக் கீரை வகைகளை மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் தினமும் மாற்றி, மாற்றி பயன்படுத்த வேண்டும்.

மணலிக் கீரையை குடிநீரிட்டு 30-60 மில்லி குடிக்க குடலிலுள்ள தட்டைப் புழுக்கள் ஒழியும்.

பெண்களிற்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோயிற்கு இக் கீரையை வாரத்திற்கு 3 நாட்கள் சமைத்துண்ணலாம்.

கீரையை வேக வைத்து வெள்ளரிக்காய் சேர்த்து தயிர் கலந்து மிளகுத் தூளிட்டு நன்றாகப் பிசைந்து தாளிதம் செய்து அவியல் தயாரிக்கலாம். இக் கீரையை உணவில் சேர்ப்பதால் மலச்சிக்கல், பசியின்மை, வயிற்றுப் பொருமல் என்பன தீரும்.

சூப் தயாரிக்க இக் கீரையை மற்றைய காய், கறிகளுடன் சேர்த்து மிளகு, உள்ளி சேர்த்து சூப் தயாரித்து பருக உணவு இலகுவில் ஜீரணமாவதுடன், உடலின் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும்.

### கற்றாழை- Aloe vera

தோலினைப் பாதுகாத்து குறிப்பாக முகத்தினை அழகு படுத்தும். பழங்காலந் தொட்டே அழகு சாதனமாகப் பயன்பட்டு வருகின்றது.

கற்றாழையின் சோற்றை எடுத்து நன்றாகக் கழுவி பனங்கற்கண்டு சேர்த்து உஷ்ண வியாதிகளுக்கு சாப்பிடுவது நாட்டுப்புற வழக்கம். இதனால் உடல் உஷ்ணம் நீங்குவதோடு உடலில் தோன்றும் அரிப்பு, சிறு நீரில் காணும் எரிச்சல் முதலியவை நீங்கும்.

இலையின் சோறுடன் வெல்லப்பாகு கலந்து மூல நோய் தீர பயன்படுத்தலாம்.

சோற்றுக் கற்றாழையுடன் பனை வெல்லம் சேர்த்து சாப்பிட சுக்கில நட்டம் தீரும்.

சோற்றுக் கற்றாழைச் சதையும் கொஞ்சம் பனங்கற்கண்டும் கூட்டி ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து காலையில் வெறும் வயிற்றில் மூன்று வாரங்கள் தொடர்ந்து சாப்பிட வயிற்றுப் புண் ஆறும்.

### குத்துக்காரன் சம்மட்டி-(Indigofera oblongifolia)

இதன் வேரினால் கொடூரமான மகாவாதக் கூட்டம், மேகக் கட்டிகள், திமிர்வாதம், மூர்ச்சையின் அயல் ஆகியவைகள் போகும்.

### பட்டிப்பூ- Vinca rosea

இலையின் சாறு வெட்டுக் காயத்தை ஆற்றும். அத்துடன் வயிற்றுப் போக்கு விளைவிக்கும் கிருமிகளைத் தவிர ஏனைய கிருமி வகைகள் பலவற்றை எதிர்க்கும் குணமுள்ளது. இதிலுள்ள Vindoline என்ற மருத்துவத்துடன் ஏனைய சத்துக்களும் (Alkaloids) கிருமிகள் பலவற்றை கொல்கின்றன.

உடலைப் பலப்படுத்துவதுடன் மூலத்திலிருந்து இரத்தம் வடிதலை கட்டுப்படுத்த இதன் இலையின் குடிநீரை குடித்து, வெளி உபயோகமாகவும் பயன்படுத்தலாம். தொண்டைச் சதை வளர்ச்சி, தொண்டை உபாதைகளை குணமாக்கும்.

### வீழி- Cadaba fruticosa

வீக்கத்துடன்கூடிய மூட்டுவியாதிகளில் இதன் இலைகளை சிறுகச் சிறுக அரிந்து பொட்டணியாக துணியில் முடிந்து கட்டி தைலம் பூசியபின்பு பொட்டணியை சூடுகாட்டி ஒத்தடம் கொடுக்க வீக்கம் குறைந்து வலி தணியும்.

இதன் இலைகளை துவையல் செய்து அல்லது சமைத்து உண்ணின் கரப்பான், வெள்ளை, பசியின்மை, வயிற்றுப்புழு, வெளிக்குப் போகாமை இவைகளைப் போக்கி உடலுக்கு வன்மையைத் தரும்.

இலையைக் குடிநீரிட்டு ஆமணக்கு நெய் சேர்த்துக் கொடுக்க கழிச்சலை உண்டாக்கி புழுக்களை வெளிப்படுத்தும். வாத,பித்த கபக் குற்றங்களை தன்னிலைப்படுத்தும்.

### விராலி -Dodonaea viscosa

இதன் இலைகளைச் சிற்றாமணக்கு நெய் விட்டு வதக்கி, வீக்கங்களுக்கும் கட்டிகளுக்கும் வைத்துக் கட்டிவர, வெகு சீக்கிரத்தில் அவைகள் போகும்.

### நாவல்-Eugenia jambolana

நாவல் பழக் கொட்டைகளை (10) இடித்து தண்ணீரில்(150 மில்லி) போட்டு சுண்டக் காய்ச்சி, அந்தத் தண்ணீரில் தினமும் இரு வேளை குடித்து வந்தால் நீரிழிவு கட்டுப்படும்.

20 கிராம் நாவல் மரப்பட்டையை ஒரு லீற்றர் தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்துக் குடித்தால் தோல் நோய்கள் குணமாகும்.

நாவல் பழத்தை மாதவிலக்கு வருவதற்கு ஒரு வாரம் முன் சாப்பிட்டால் மாத விலக்கு தள்ளிப் போகும்.

நாவல் கொட்டை, சிறுகுறிஞ்சான், வெந்தயம், மாம் பருப்பு ஆகியவற்றைச் சம அளவு எடுத்து அரைத்துப் பொடி செய்து, தினமும் மூன்று கிராம் அளவுக்குச் சாப்பிட்டால் சர்க்கரை நோய் குணமாகும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

### மருதோன்றி Lowsonia inermis

சங்க காலத்திலேயே மருதாணி இலைகளை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து பெண்கள் கை, கால், விரல் நகங்களுக்குப் பூசி அழகூட்டுவார்கள். இதில் மருத்துவக் குணமும் உண்டு. அதாவது இதைப் பூசினால் நகச்சுற்று வராது. மற்றும் நகங்களில் ஏற்படும் பங்கஸ் நோயும் வராது.

மருதோன்றி செடியின் வேர்ப்பட்டையை நிழலில் உலர்த்தி சருகுபோல உலர்ந்ததும் அதை உரலில் போட்டு இடித்து தூளாக்கி சல்லடையில் போட்டு சலித்து ஒரு சுத்தமான சிறு கிண்ணத்தில் தூளைப் போட்டு கொஞ்சம் தேங்காயெண்ணை சேர்த்து குழைத்து எந்தப் புண்ணாக இருந்தாலும் அதன்மேல் கோழி இறக்கை கொண்டு மருந்தை தடவி வந்தால் புண் சீக்கிரம் ஆறிவிடும். புண்ணை முதலில் கிருமி நீக்கி கொண்டு சுத்தம் செய்த பின்னரே பூச வேண்டும்.

### முடிதும்பை-Leucas zeylanica

5 இலைகளின் தனிச் சாற்றை 90 மில்லி வாழைப்பட்டைச் சாற்றுடன் கலந்து விஷக் கடிகளுக்கு கொடுக்கலாம்.

தலைப் பொடுகு நீங்க- தும்பைப்பூ 50 கிராம், நல்லெண்ணெய் 100 கிராம் சேர்த்துக் காய்ச்சி தலைக்கு தேய்த்து தலை முழுகி வந்தால் நீங்கும்.

தலைவலி நீங்க நல்லெண்ணெயில் 25 தும்பைப்பூ போட்டு காய்ச்சி ஆறவைத்து தலைக்கு தேய்த்து தலை முழுக தலைவலி குணமாகும்.

சொறி, தடிப்பு, நமைச்சல் குணமாக ஒரு கைப்பிடி தும்பை இலைகளை சுத்தம் செய்து மிளகு 10, பூண்டு 10 பல், சிறிது பெருங் காயம் சேர்த்து அரைத்து உப்பு, புளி, காரம் சேர்த்து துவையல் செய்து உண்ணலாம்.

### இம்பூரல்-Oldenlandia unbellata

இலையின் பொடியை, இரண்டு பங்கு அரிசி மாவுடன் கலந்து அடையாகச் செய்து, இரைப்பு, ஈளை உள்ளவர்கள் சாப்பிட்டு வரலாம்.

மருத்துவ முக்கியத்துவமுடைய தாவரங்கள் பிரதேச வாரியாகவும், சூழலுக்கு ஏற்றவாறும் பல வாரியாகப் பரம்பிக் காணப்படும். பிரதேச ரீதியாக உள்ள மூலிகைகளை இனங்கண்டு அவற்றை பாதுகாப்பதன் மூலம் மூலிகை அழிவதைத் தடுப்பதுடன் அவற்றை பயன்படுத்தியும் நல்வாழ்வு வாழலாம்.

# தனித்தேசம், சுயாட்சி இரண்டும் தமிழ்மக்களின் ஆத்ம விருப்பம்

மக்களுக்கு உள்ள தெளிவு அரசியல் வாதிகளுக்கும் நிறுவனங்களுக்கும் இல்லை என்பது, மீண்டும் ஒரு முறை அழுத்தமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் படுகொலையினதும் போரின் முடிவின் மேலெழ இருந்த அவல, அடிபணிவு, ஒப்படைவு, சரணாகதி அரசியலை முற்றாகப் புறந்தள்ளி, பூகோள-பிராந்திய அரசியலை கவனமாக உள்வாங்கி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சாத்தியமான எதிர்ப்பு அரசியல் வடிவம் குறித்த, உரையாடலை தொடர்ந்து பேணுவது குறித்தே தமிழர் தரப்பு சிந்தித்து இருக்க வேண்டும்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக போரில் நாம் தோற்கடிக்கப்பட்ட முறைமையும் அதன் விளைவான அவலமும் எம்மை அரசியலே வேண் டாம் என்ற ஒரு நிலைக்கு தள்ளியிருந் தது. இதன் விளைவாக சிங்கள நிகழ் ச்சி நிரலை தெளிவாக வழிநடத்துபவர்களாக நாம் மாறியிருந்தோம்.

இது, சிங்களத்திற்கு கிடைத்த பாரிய வெற்றியாக இருந்து வந்தது. இந்த உளவியலிலேயே தொடர்ந்து இருக்கும் வண்ணமாக சிங்கள அரசு கவனமாகக் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறது.

போரில் பாரிய வெற்றியைப் பெற்ற போதும் அதை இறுதியும் அறுதியுமான வெற்றியாக்கிக் கொள்ள போராடியவர்கள் மீதும் அதற்கு தோள் கொடுத்த மக்கள் மீதும் மிகப்பெரிய மனிதப் பேரவலத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது சிங்கள அரசு.

திட்டமிட்டே சிங்கள அரசு நடத்தும், இந்தக் கபடநாடகத்தை புரிந்துகொள்ள முடியாமல் பலர் சிங்களத்தின் காலடியில் பொத்துப் பொத்து என்று விழத் தொடங்கியிருந்தார்கள். தெரியாமல் விழுந்தவர்கள் பாதி, தெரிந்து வீழ்ந்தவர்கள் மீதி என்று, வேறொரு வகை அவலம் எமது இனத்தின் எதிர்காலத்தின் மீது இருளாய் கவியத் தொடங்கியிருந்தது.

எதிர்ப்பு அரசியலை எப்படிச் செய்யப்போகிறோம் என்று சிந்தித்து செயற்பட வேண்டிய நாம் ஏன் சிங்கத்திற்கெதிராக எதிர்ப்பு அரசியல் செய்யவேண்டும் என்று மீண்டும் 60 வருடங்களுக்கு பின்னோக்கி சுருங்கியது ஒரு அவலமான வரலாற்று முரண்.

மே 18 உடன் முடிந்துபோன ஆயுதப்போராட்டத்தின் பின்,இந்தக் கணம் வரை இந்த கால இடைவெளியில் சிங்களத்துடன் ஒரு இணக்கப்பாட்டு அரசியலை செய்வதற்கு சாத்தியமான நம்பிக்கை தரும் ஒரு சிறு சமிக்ஞைகூட தெரியவில்லை.

மாறாக, மாபெரும் பேரவலத்தை சிங்களம் கட்டவிழ்த்துக் கொண்டே இருக்கிறது. ஆனால், தமிழ்த் தேசிய அரசியல் செய்பவர்கள் தொடக்கம் கே.பி.வரையான ஒரு தொகுதியினர் சிங்களத்துக்கு மனம் நோகாமல் நடப்பது குறித்து வகுப்பெடுக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

சிங்களத்துடன் இணக்கப்பாட்டு அரசியல் மூலம் நாம் எதையும் பெற முடியாது. அரசியலை மட்டுமல்ல- மக்கள் துயரங்களைக் கூட போக்க முடியாது. ஏனெனில் திட்மிட்டே செய்யப்படுகின்ற விடயம் இது. பேரம்பேசும் ஒரு வல்லமையை உருவாக்குவது தான் எல்லாவற்றிற்கும் ஒரு தீர்வாக இருக்க முடியும். எல்லாம் முடிந்துவிட்டது என்று அவல அடிபணிவு, ஒப்படைவு அரசியலை செய்யமுடியாது.

ஏனெனில், சிங்களம் அதையும் தனக்கு சாத்தியமாக மாற்றுமே தவிர, ஒரு சிறு உரிமையைக் கூட தராது. முள்ளிவாய்க்கால் அழிவை அடுத்து முதலில் ஒரு வாதத்திற்கு ஏற்றுக் கொண்டிருந்தாலும் கூட இடைப்பட்ட இந்த காலம் மேற்படி யதார்த்தத்தை எமக்கு போதித்திருக்கிறது.

போரில் நலிவடைந்த- விரட்டப்பட்ட மக்கள் இன்னும் முழுமையாக தமது சொந்த இடங்களில் மீளக் குடியேற்றப்படவில்லை. அவர்களது வாழ்விடங்களும் பாடசாலைகளும் மீளமைக்கப்படவில்லை. ஆனால், மிக துரிதமாக சிங்களக் குடியேற்றங்களும் புத்தவிகாரைகளும் தினமும் தமிழர் தாயகம் எங்கும் முளைத்தபடியே இருக்கின்றன. எந்தச் சக்தியாலும் இவற்றை தடுக்க முடியவில்லை.

தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து மக்களும் மீளக் குடியேற்றப்பட்டாலும் திடீரென முளைத்தத சிங்கள முஸ்லிம் குடியேற்றங்களும் பௌத்த மேலாதிக்க மத அடையாளங்களும் ஏற்கனவே போரில் அழிந்துபோன வாழ்வை கட்டமைக்க முயலும் தமிழ் மக்களுக்கு மேலதிக வாழ்வியல் பௌதிக பொருண்மிய பண்பாட்டு சிக்கலை உருவாக்கும்.


இது வேறு ஒரு வகை அவலமாக அந்த மக்களுக்கு இருக்கும். இவை எல்லாற்றையும் உற்று நோக்கும்போது மிக நுட்பமான முறையில் ஒரு அடக்குமுறையை பேரின மேலாதிக்க அரசாங்கம் கையாள்வதாகவே தெரிகிறது.

கட்டமைக்கப்பட்ட இன அழிப்பிற்குள் எமது மக்கள் சிக்குண்டுள்ளது ஒன்றும் பூடகமானதல்ல. எம்மில் ஒரு தொகுதியினரே இன்று இவற்றையெல்லாம் நியாயப்படுத்தும் நிலையிலிருப்பதிலிருந்து, இந்த முரண் அவலத்தை புரிந்து கொள்ளமுடியும்.

எதிர்ப்பு என்றவுடன் ஏதோ ஆயுதப் போராட்டம் என்பது போல் பலர் கற்பனை செய்து வியாக் கியானங்களை அடுக்குகிறார்கள். இன்னொரு அவலத்திற்கு தூபம் போடுகிறார்கள் என்று உளறவும் தலைப்படுகிறார்கள். எதிர்ப்புடன் பேரம் பேசும் வல்லமையை வளர்த்துக் கொள்ளும் எல்லா மக்கள் செயற்பாடுகளும், எதிர்ப்பு அரசியல் வகைக்குள் வரும். அரசியல் தீர்வுகளை மட்டுமல்ல- மக்களின் அவலங்களைப் போக்குவதற்கும் அவர்களுக்கு ஒரு வளமான வாழ்க்கை சூழலை அமைத்துக் கொள்வதற்கும் கூட நாம் எம்மை ஒரு வல்மையுள்ள சக்தியாக மாற்றவேண்டும்.

இப்போது மக்கள் வழங்கிய இந்த தீர்ப்பு, மக்கள் இணக்க அரசியலை புறந்தள்ளி எதிர்ப்பு அரசியலுக்கு தம்மை தயார்ப்படுத்தி விட்டார்கள் என்பதையே சுட்டி நிற்கிறது. மேற்படி கூறுகளை யாரும் விளக்கம் செய்யாமலேயே மக்கள் உணர்ந்திருப்பதை ஆரோக்கியமான அறிகுறியாக நாம் கொள்ளலாம்.

இணக்க அரசியலா? எதிர்ப்பு அரசியலா? என்று தடுமாறிய கூட்டமைப்பினருக்கும் மக்கள் தமது தீர்பினூடாக தெளிவான பாதையைக் காட்டியிருக்கிறார்கள்.



தேர்தல் முடிவு குறித்து கேட்ட போது, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், சமாதானத்திற்கு மக்கள் வழங்கிய ஆதரவு என்றார்.

வேறு சில சந்தர்ப்பவாத, பிழைப்புவாத ஆய்வாளர்கள்,விடுதலைப் புலிகளுக்குப் பின்னான அரசியலின் வெற்றி என்று, மக்களையும் விடுதலைப் புலிகளையும் அந்த அடித்தளத்திலிருந்து கட்டப்பட்ட எதிர்ப்பு அரசியல் வடிவத்தையும் நீர்த்துப் போகச் செய்யும் சிங்கள நிகழ்ச்சி நிரலை முன்மொழிகிறார்கள்.

ஆனால், இந்தத் தேர்தல் முடிவுகளுக்கு முன்பே தேர்தல் பிரசார கூட்டங்களில் கூட்டமைப்பினர் முன்வைத்த விடுதலைப்போராட்ட இயக்கத்திற்கு ஆதரவான கோசங்களும் மக்கள் அதற்கு காட்டிய எதிர்வினையும் மக்கள் எந்த அரசியலை முன்மொழிகிறார்கள் என்பதை தெளிவுபடுத்திவிட்டது. அனந்தி எழிலனை, கூட்டமைப்பு களத்தில் இறக்கியதன் பின்புலத்தையும் தொடர்ந்து அவரைச் சுற்றி நடந்த நிகழ்வுகளையும் வைத்தே இவற்றை மிக சுலபமாக நிறுவ முடியும்.

வேறு எந்த வேட்பாளரையும்-ஏன் முதன்மை வேட்பாளரான விக்கினேஸ்வரனைக் கூட எதிரிகள், பெரிதாக இலக்கு வைக்கவில்லை. அனந்தி யார்? அவர் ஏன் இலக்கு வைக்கப்படுகிறார்.

ஒரு போராட்டத்தின் -ஒரு இனத்தின்- எதிர்கால அரசியலின் வெளிப்படை உண்மைகளைக் கொண்ட பின்புலம் அது.

அவரைக் கூட்டமைப்பு, களத்தில் இறக்கியதும்கூட ஒன்றும் பூடகமானதல்ல. ஏனென்றால் அனந்தி எழிலன் விடுதலைப்புலிகளின் பிம்பமாக இருக்கிறார். ஒரு இனத்தின் உளவியல் சாட்சியும் குறியீடும் அவர். அதுவே, இன்று கூட்டமைப்பின் வெற்றிச் சூத்திரமாகவும் மறுவளமாக சிங்களத்தின் உளவியலில் உடைப்பை ஏற்படுத்தும் குறியீடாகவும் இருக்கிறது. அவர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதியாகவே சகல தரப்பினரா லும் பார்க்கப்படுகிறார். அரச தரப் பும் அவ்வாறே நோக்கிறது. எனவே அதனால், சகித்துக்கொள்ள முடியவில்லை.

ஆனால், நேற்று மட்டுமல்ல நாளையும்கூட இலங்கைத் தீவின் அரசியலை தீர்மானிக்கும் சக்தி விதலைப்புலிகள்தான். அவர்கள், இருக்கும்போதும் இல்லாதபோதும் அரசியல்போக்கை- இயக்கும் பரம்பொருளாக அவர்கள் இருக்கிறார்கள் இதுவே, இன்று இந்த தேர்தல் முடிவுகளை அடுத்து வெளிப்பட்டிருக்கும் மிக முக்கியமான உண்மையாகும்.

மக்கள் தமது உறுதியையும் உளவியலையும் தாம் யாரின் பின்னால், அணிவகுத்து நிற்கிறோம் என்ற செய்தியை தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். சிங்களத்திற்கும் இந்தியாவிற்கும் ஐ.நா.விற்கும் அமெரிக்காவிற்கும் இந்த உண்மை உறைப்பது இருக்கட்டும் கூட்டமைப் பிற்கு கொஞ்சம் ஆழமாக இது உறைத்திருப்பதுதான் இங்கு முக்கியமானது.

அரிசி பருப்பு தருகிறோம், என்று கூட்டமைப்பு வன்னி மக்களிடம் வாக்கு கேட்கவில்லை. பிரபாகரன் மாவீரன், துயிலுமில்லங்களை மீள அமைக்கிறோம், மாவீரர்களின் சாட்சியாக நிற்கிறோம் என்றுதான் வாக்கு கேட்டார்கள்.

பிரபாகரனையும் புலிகளையும் தம்மையும் வேறுபடுத்தும், ஒரு அரசியல் என்று ஒன்று இல்லை. என்பதை மக்கள் இன்று நிரூபித்திருக்கிறார்கள்.

மக்கள் எடுத்திருக்கிற முடிவு இணக்க அரசியல் நோக்கர்களின் சில வாய்ப்பாடுகளை- நியதிகளை உடைத்திருக்கிறது.

தனித்தேசம் என்ற பதங்கள் அவர்கள் உளவியலில் ஒரு கூட்டு நினைவுத் திரட்டாக படிந்து போயிருப்பதையே இது சுட்டுகிறது. சிங்கள அரசுக்கு மட்டுமல்ல தாம் வாக்களித்த கூட்டமைப்பிற்கும் இதையே மக்கள் நினைவுறுத்த விரும்புகிறார்கள் என்று கொள்ளலாம்.

இவையெல்லாம் மக்கள், மாகாண சபைக்கு வாக்களிக்கவில்லை தாய் தேசத்தின் விடுதலைக்காக, உயிரைச் துச்சமாக மதித்த தியாகிகளை சாட்சியாகக் கொண்டு, ஈழத் தமிழ் நிலத்தின் சுயாட்சியை மனப்பூர்வமாக எண்ணியே வாக்களித்துள்ளனர்.

-பரணிகிருஷ்ணரஜனி-

# திருவண்ணாமலையில் கோபூஜை ஆரம்பம்



## ஆன்மீகம் 124

ஒருவர் யாசகம் கொடுத்தால் அதை பெறும் காவி வேட்டி சந்தியாசி, தானம் கொடுத்தவர்களுடைய கரும வினைகளையும் அதனுடனே வாங்கிக் கொள்கிறார்கள்.

கொன்றால் பாவம் தின்றால் போச்சு என்பதற்கிணங்க அந்த சந்தியாசி இவர்கள் செய்யும் பாவ மூட்டைகளை சுமந்து கொண்டு ஊர் ஊராய் சுற்றித் திரியும் அவலநிலை வந்துவிட்டது. சாதுக்கள் தங்குவதற்காக கட்டப்பட்டதே ஆலயமாகும். ஆனால் அது இன்று பூட்டுப்போட்டு எந்த நேரத்தில் கோயிலுக்கு திருடன், தேசதுரோகி வருவான் என்று காவல் போடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

அண்ணாமலையார் திருக்கோயிலுக்கு அடிக்கடி செல்லக்கூடிய மாபெரும் பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. உயர்ந்த உள்ளம் கொண்ட அன்பர் ராமதாஸ் ஐ.எ.எஸ் அவர்கள் என்னுடன் நிறைய சித்தர்கள் வாழும் மலை குகைகள் அடர்த்தியான காடுகளுக்கெல்லாம் வந்திருக்கிறார். இதுவரை 50 லட்சம் மனிதர்களைக் கண்ட எனக்கு இவர் வித்தியாசமான ஆன்மீகவாதி, தேச பக்தியும் தரும சிந்தனையும் உடைய்வர் என்பது எனக்கும் சித்தர்களுக்கும் தெரியும். வனங்களில் அவர் செய்கின்ற பூஜையே ஒரு தனி அழகு என்று சொல்லலாம். அவர் பூஜை செய்தால் வனத்தில் ரிஷிகள், சித்தர்கள் நிறையப் பேர்கள் சூட்சுமத்தில் வருவார்கள்.



சித்தர் சுவாமியும் ரமணி குருஜியும் கோ பூஜையில்

என் குருநாதர் ஸ்ரீலஸ்ரீ காகபுஜண்டர் தலையாட்டிச் சித்தரிடம் ஆன்மீக பணி செய்ய அரசு அதிகாரிகள் எனக்கு மிகவும் துணையாய் இருப்பார்கள். ஆகையால் கோயில் அதிகாரியாய் திரு.வி. ராமதாஸ் அவர்களை நீங்கள் போட வேண்டும் என்று சித்தரை வற்புறுத்திக் கொண்டிருந்தேன்.

கண்மூடி தியானத்திலிருந்த சித்தர், என்ன ராஜா இதை ஒரு பெரிய விடயமாகப் பேசுகிறாய். ஒரு சொட்டு இங்க விஷயம் தானே திரு.வி.ராமதாஸ் கோயில் அதிகாரியாகி விடுவார். உபயோகப்படுத்திக்கொள் என்றார்.

அறநிலையத்துறை கமிஷனராக திரு.வி. ராதாஸ் ஐ.ஏ.எஸ் பதவி ஏற்றார். எனக்கு சொல்ல முடியாத மகிழ்ச்சி. பதவி ஏற்றதும் சித்தரைக் கான வந்தார். நான் இப்போது என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். உலகிலேயே சக்தி வாய்ந்த பெரம்பலூர் மதன கோபால் சுவாமி திருக்கோயிலை கும்பாபிசேகம் செய் என்றார்.

திருவிராமதாஸ் அவர்களாலேயே மதனகோபால் சுவாமி கோயிலிலுள்ள பாண்டவர்கள் வைத்த ஸ்தல விருட்சம் நந்தியா வட்டை செடிக்கு தண்ணீர் ஊற்றி போர் சொட்டும் போட்டதால் இன்று வரை அங்கு பூக்கள் பூத்துக் குலுங்குகிறது. இந்த கோயில் ஸ்ரீலஸ்ரீ காகபுஜண்டருடைய ஜீவசமாதி ஆகும்.

மாலை நேரங்களில் திரு.வி. ராமதாஸ் அவர்களுக்கு ஸ்ரீ போகர் 7000 புத்தகம் கொண்டு போய் படித்துக் காட்டுவேன். உடனே சமயம் பார்த்து எல்லா கோயில்களிலும் காலையில் கோபூஜை செய்தால் நாட்டில் மழை பெய்யும். கோயில்கள் சுபீட்சமாக இருக்கும் என்றேன்.

முதன் முதலில் திருவண்ணாமலை கோயிலில் ஆரம்பிப்போம் என்று கூறி இன்று இணை ஆணையரும் சித்தர் பெருமானின் சீடருமான திரு.சுந்தரம் நிர்வாக அதிகாரியிடம் கூறினார். (தொடரும்)

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி


# வீழ்வது விதையாகும் உருகுவது ஒளியாகும்!



அக்கினிக்குஞ்சாக மாறினான் பார்த்தீபன். அதை நல்லூரில் வைத்து போராட்டத் தீ வளர்த்தான். பொந்தில் வைத்தால், காடுகளே வெந்து தணியும். ஆனாலும், இன்னமும் தணியவில்லை அவன் மூட்டிய பெருநெருப்பு.

இந்திய வல்லாதிக்கத்தின் வஞ்சக நகர்விற்கு எதிராக போராட்ட வடிவத்தை மாற்றிய தியாகி திலீபன், ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து உயிர் துறக்கும் வரையான உண்ணாநிலைப் போரினை முன்னெடுத்தான். ரூபாய் நோட்டில் காந்தியை வாழவைக்கும் இந்திய தேசம், விடுதலைப்புலிகளின் அறவழிப்போராட்டத்தைக் கண்டு சினமடைந்தது. எமது போராட்ட வடிவங்கள் மாறினாலும் இந்தியாவின் இலக்கு மட்டும் மாறவில்லை. சொந்த நலனைக் காப்பாற்ற தமிழ் மக்களின் எத்தகைய போராட்ட வடிவங்களையும் இந்திய வல்லாதிக்கம் ஏற்றுக்கொள்ளாது என்பதற்கு தியாகி திலீபனின் வீரச்சாவு மிகப்பெரிய சான்றாக வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

இந்தியாவின் காந்திய முகமூடி கிழித்தெறியப்பட்டது நல்லூரில்தான். அணு ஆயுதம் தாங்கிய காந்திதேசம், இன விடுதலையின் அறவழிப்போராட்டத்தை குழிதோண்டிப் புதைத்ததும் நல்லூரில்தான். அவனது இறுதி மூச்சு தாயகக் காற்றில் கரைந்து இன்னமும் உயிர்ப்புடன் வாழ்வதை இந்தியதேசம் உணர்வதாகத் தெரியவில்லை. துறைமுகங்களில், அனல் மின் நிலையங்களில், மன்னார் கடற்பரப்பில் பிணைக்கப்பட்டுள்ள இந்திய நலன்கள், திலீபனின் தியாகத்திற்கு பதில் சுஹறியே தீரவேண்டும்.



சிங்களத்தின் போலி வாக்குறுதிகளால் காந்தியை மறந்து பாரததேசம், பன்னிரு வேங்கைகளும் துடித்து மடிந்ததை கைகட்டி வேடிக்கை பார்த்தது. முள்ளிவாய்க்காலிலும் பேரினவாதத்தின் முதுகு தடவல்கள் தொடர்ந்தன. இந்தியாவின் சட்டிலைட் கண்கள், வன்னியை அளந்து சிங்களத்திடம் உளவு சொன்னது. நீட்டிய நேசக்கரங்களை வெட்டி வீழ்த்திய போதும் சிங்களத்தின் வாக்குறுதிகளால் மயங்கிக் கிடந்தது இந்தியா.

இன்னமும் மயங்குகிறது. மயங்கிச் சரியும் போது சிங்களத் தீவினில் சீனக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருக்கும். அன்று திலீபன் சொன்ன செய்தியை இன்றுவரை இந்திய அதிகாரவர்க்கம் உணர்ந்து கொள்ளவுமில்லை. உணரப் போவதுமில்லை. அகிம்சைப்போரில் கரும்புலியானவனே தியாகி திலீபன். அவர் வெடித்துச் சிதறவில்லை. உயிர் பூவை உதிர்த்து, மக்கள் மன உணர்வில் பெரும் வெடிப்பதிர்வுகளை உருவாக்கியவன். சகல சமூக ஒடுக்குமுறைகளையும் பூர்சுவா சிந்தனைகளையும் அறுத்தெறிந்து மானுட விடுதலையின் ஒரு பரிமாணமான தேசிய இன விடுதலையை வென்றெடுக்கும் மக்கள் புரட்சி குறித்தே அவன் பேசினான், ஒரே இன குழுமத்தினுள். சாதிய, மத ஒடுக்குமுறையைக் காவித் திரிந்தவாறு மக்கள் புரட்சியை நிகழ்த்த முடியாது. ஒடுக்குமுறைகள் பல வடிவங்களில் வியாபித்திருந்தாலும் அவை யாவும் பேரினவாதத்தின் ஒடுக்குமுறைக்கு எந்த வகையிலும் குறைவானதல்ல.

ஆகவே மக்களை அணிதிரட்டும் போது அகநிலை முரண்பாடுகளையும் கருத்தில் கொள்ளல் வேண்டும். அப்போதுதான் திலீபன் தரிசிக்க விரும்பிய மக்கள் புரட்சியின் பூரண வடிவம் முழுமை பெறும். யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல் என்றால் சகல ஆயுதப் போராட்டங்களும் அரசியல் போராட்டத்தின் வடிவங்களே. அவை கையாளும் அரசியல் கோட்பாடுகளைப் பொறுத்தே, அவற்றினை மக்கள் யுத்தம் என்றும் ஆயுதக்கிளர்ச்சி என்றும் பிரித்துப் பார்க்கப்படுகிறது. ஆனாலும் தேசிய இன விடுதலைக்கான ஆயுதப் போராட்டமானது தற்காலிகமாக நிறுத்தப்பட்ட நிலையில் திலீபனின் மக்கள் புரட்சிக்கான அறைகூவல் உயிர்ப்புடன் இயங்குகிறது.

ஒடுக்குமுறைவடிவங்கள் வியாபித்தவண்ணமுள்ளது. வவுனியா வதைமுகாம், வடக்கு, கிழக்கெங்கும் கிளைபரப்பி விரிகின்றது. இயல்பு வாழ்வினை மீட்டெடுக்கும் போராட்டமா? அல்லது தீர்வுத் திட்டங்களை அரங்கேற்ற மேடைகள் தேடும் நகர்வுகளா? அல்லது இந்திய நலன் எதுவென்று ஆய்வு செய்யும் போக்குகளா? அல்லது இவை மூன்றும் இணைந்த புதிய தளமா? இவற்றில் தடம் பதிக்க முன் திலீபனின் மக்கள் புரட்சி குறித்தும் அதை முன்னெடுக்கும் வழிமுறை பற்றியும் சிந்திக்க வேண்டிய காலமிது.

உயிரை உருக்கிய திலீபன் ஒளியானான். அர்ப்பணிப்புக்கள் வீண்போகாது. வீழ்த்தப்பட்ட விதைகள் மறுபடியும் முளைக்கும். அதே வேளை சிங்களத்துடன் இந்தியா செய்து கொண்ட உடன்படிக்கையே தமிழ் மக்களிற்கான தற்காலிகத் தீர்வினைக் கொண்டுவருமென்கிற வகையில் பழைய விதைகளும் விதைக்கப்படுகின்றன. அதாவது இலங்கை- இந்திய ஒப்பந்தம் உருவாக்கிய, தற்காலிக வட- கிழக்கு இணைப்பு மாகாணசபையானது சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தி விடுமாம்.

பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாணசபைக்கு இந்த உரிமைகளை வழங்க சிங்களம் மறுக்கின்றது. ஆயுதக்குழுத் தலைவர் முதலமைச்சர் பிள்ளையான், அரசோடு இணைந்திருந்தும் இவ்வுரிமைகளைப் பெறமுடியவில்லை. ஆகவே, சில தமிழக தலைவர்கள் உட்பட, எல்லோரிற்கும் கனவு காணும் உரிமையுண்டு.

ஆனால், வரலாற்றில் பதிவான நிஜங்கள் மறுதலித்தவாறு, மீண்டும் ஒரு விசப் பரீட்சையில் குதிக்கும்படி அறிவுரை வழங்குவது இக்காலகட்டத்தில் பொருத்தப்பாடான விடயமாகத் தோன்றவில்லை. 13-வது திருத்தச் சட்டத்திலும் அரச பிரதிநிதியான கவர்னரை மீறி காணி, நிதிவிவகாரங்களைக் கையாளும் பூரண சுதந்திரத்தினை தமிழர்கள் அனுபவிக்க முடியாது. ஆனாலும், சிங்களம் வழங்க விரும்புவது கிராம சபை அல்லது அதற்கு ஒருபடி மேலுள்ள பிரதேசசபை மட்டுமே. மாகாணசபையாலும் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்த முடியாது. அதற்கு எதிராக இந்தியா அழுத்தம் கொடுக்க முனைந்தாலும் சில இந்தியக் கம்பெனிகளுக்கு அனல்மின் நிலையம் அமைக்க தமிழர் நிலங்களை பகிர்ந்தளித்து அவர்களின் வாயையும் அடைத்துவிடும் சிங்களம். அவை தான் இப்போது நடைபெறுகின்றது. வன்னி நிலங்களை விவசாய ஆராய்சிக்கு வழங்கினால் இந்திய ஆளும்வர்க்கம் எம்மை திரும்பிக்கூடாப் பார்க்காது.

இந்தியா அதிகம் வெருட்டினால் இருக்கவே இருக்கிறது, பலமிக்க சீன தேசம். ஆகவே இந்திய பாதுகாப்பிற்காகவும் பொருளாதார நலனிற்காகவும் இன்னமும் பல விட்டுக்கொடுப்புக்களை செய்யுமாறு சிலர் வலியுறுத்துகிறார்கள். திலீபனை இழந்தது போதும். இத்தனை இலட்சம் மக்களையும் இழந்தது போதும். பரஸ்பர நலன் என்பது ஒருவழிப் பாதையல்ல என்பது இந்திய மத்திய அரசுக்கு தமிழ்நாடுதான் எடுத்துக் காட்ட வேண்டும்.

-இதயச்சந்திரன்-

# ஈழத்தமிழர்களுக்கு சம அந்தஸ்தை வழங்க இந்தியா வற்புறுத்த வேண்டும்

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்து

(சென்னை)

**இலங்கையில் தமிழர்கள் அதிகம் வசிக்கின்ற வடக்கு மாகாணத்தில் 25 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெற்ற தேர்தலில், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றமை வரவேற்கத்தக்கது.**

இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

மொத்த வாக்குகள் மூலம் 38 இடங்களில் 30 இடங்களை பெற்றுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு கட்சியின் தமிழ் நாடு மாநில செயற்குழு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

தேர்தலையொட்டி இலங்கை இராணுவத்தின் அத்துமீறல்கள் தொடர்ந்து இருந்ததாக புகார்கள் எழுந்தபோதும், வாக்காளர்கள் அதிகளவில் வாக்களித்து, ஜனநாயக ரீதியில் தங்களது தீர்ப்பை அளித்துள்ளனர்.

உரிய அதிகாரங்களுடன் கூடிய மாகாண சுயாட்சி தேவை என்ற தங்களது எண்ணத்தை இந்த தேர்தல் மூலமாக தமிழ் மக்கள் உலகுக்கு எடுத்துரைத்துள்ளனர்.

மக்களின் இந்த தீர்ப்புக்கு இலங்கை ஆட்சியாளர்கள் மதிப்பளிக்க வேண்டும். தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு 13 ஆவது அரசியல் சட்ட திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்ய இலங்கை அரசாங்கம் முயற்சித்தது. அது தவறான பாதை என்பதை மக்கள் தற்போது தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

எதிர்வரும் காலங்களில் இலங்கை அரசாங்கம், மக்களின் மகத்தான நம்பிக்கையை பெற்றுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு அதிகாரப் பரவலுக்கான பேச்சு வார்த்தைகளை நடத்திட வேண்டும். 13 ஆவது அரசியல் சட்டதிருத்தத்தின் அடிப்படையில், இலங்கைத் தமிழர்களுக்கு சம அந்தஸ்து மற்றும் அதிகாரப் பரவல் அளித்திட, இலங்கை அரசை இந்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டுமென கட்சியின் மாநில செயற்குழு மத்திய அரசை வலியுறுத்துகிறது என்று கூறியுள்ளார். (அ-2)

# வடக்கு மாகாண முதலமைச்சர் ஜனாதிபதியை சந்திக்க வேண்டும்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாணத்தின் முதலமைச்சர் என்ற வகையில் விக்னேஸ்வரன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அடிக்கடி பேச்சுவார்த்தை நடத்தவேண்டியது கட்டாயமானதாகும். அதனை விடுத்து ஜனாதிபதியுடன் பேசத்தயார் என்று அவர் கூறுவது கவலைக்குரியது என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தனிப்பட்ட நபர் என்ற வகையில் வட மாகாண முதலமைச்சர் தமிழக முதல்வருடன் பேச்சு நடத்தலாம். ஆனால், அவ்வாறான சந்திப்புக்களில் அரசியலமைப்பையும் 13 ஆவது திருத்தச்சட்டத்தையும் மீறி செயற்பட முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த தாம் தயாராக இருப்பதாக கூட்டமைப்பின் சார்பில் வடமாகாணத்தில் முதன்மை ரீதியாக வெற்றி பெற்றுள்ள முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் கூறியுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ-7)

# 13 ஆவது திருத்த அதிகாரங்களை வழங்கினால் போராடுவோம்

## ராவணா பலய தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கிற்கு 13 ஆம் திருத்தச் சட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டுமாயின் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்துவோம் என ராவணா பலய அமைப்பு தெரிவித்துள்ளது.

13 ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி விக்னேஸ்வரனுக்கு தனி இராச்சியம் அமைக்க இடமளிக்க முடியாது. அவ்வாறு இடமளித்தால் அரசாங்கத்துக்கு எதிராக பொதுமக்கள் போராட்டமொன்று உருவாக்கப்படும். 13 ஆம் திருத்தச் சட்டத்தின் அதிகாரங்களை அரசாங்கம் வழக்காவிட்டால், இந்தியாவைப் பயன்படுத்தி அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள கூட்டமைப்பு முயற்சிக்கிறது. இதன்மூலம் மீண்டும் பயங்கரவாதத்தை தூண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடன்படும் என அவ் அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-5)

# ஆயிரத்து 128 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் திராட்சை

(யாழ்ப்பாணம்)

இந்தவருடம் யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 128 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் திராட்சை செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் கிருஸ்ணன் சிறிபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

கடந்த 1960ஆம் ஆண்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட திராட்சை உற்பத்தியில், இலங்கையில் முதலிடம் பெற்ற மாவட்டமாக யாழ். மாவட்டம் திகழ்ந்துள்ளது.

ஆனால்,கடந்தகால யுத்தம் காரணமாக திரட்சை செய்கை யாழ். மாவட்டத்தில் 22 ஹெக்ரெயராக வீழ்ச்சியடைந்திருந்ததாகவும் அவர் கூறினார்.

22 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுவந்த இச்செய்கை பின்னர் படிப்படியாக வளர்ச்சியடைந்து கடந்த வருடம் 102 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் யுத்தம் முடிந்து கடந்த 4 வருடங்களில் 300 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் திராட்சை செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, இந்த வருடம் ஆயிரத்து 128 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் இச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். யாழ். மாவட்டத்தில் புத்தூர், கோப்பாய், கைதடி, இளவாலை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களிலும் தீவுப் பகுதியில் மண்கும்பான் பிரதேசத்தில் மட்டும் ஆயிரம் ஹெக்ரெயர் நிலப்பரப்பிலும் இச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் திராட்சை செய்கையை மேம்படுத்துவதற்காக 175 விவசாயிகளுக்கு திராட்சைக் கொடிகள் மற்றும் உபகரணங்களும் கடந்த காலத்தில் வழங்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(அ-6)



கட்டுவன் மேற்கு நாச்சிமார் ஆலயத்தில் அண்மையில் திருத்தொண்டர் புராணம் பற்றி தொடர் சொற்பொழிவாற்றிய சொல்லருவி த. கருணாகரனுக்கு ஆலய நிர்வாக சபை செயலாளர் பி. பகீரதன் *தமிழ்ச் சுடர்* பட்டம் வழங்கி கௌரவித்த போது...

# நட்டஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

கொழும்பின் கொம்பனித்தெரு பகுதியில் டாடா நிறுவனத்துக்கு வழங்கப்படவுள்ள நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் மக்களுக்கு நியாயமான நட்டஈடு வழங்க புதிய திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும் என நகர அபிவிருத்தித்துறைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொம்பனித்தெரு பகுதியிலுள்ள ஏழு ஏக்கர் நிலத்தை இந்தியாவின் டாடா நிறுவனத்துக்கு வழங்குவதற்கு ஆட்சேபம் தெரிவித்து அப்பகுதியில் வசிக்கும் அறு நூறுக்கும் அதிகமான குடும்பங்கள் தாக்கல் செய்த மனுக்களை பரிசீலித்த போதே உச்சநீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

வெளியேற்றப்படும் குடும்பம் ஒன்றுக்கு 45 இலட்ச ரூபாய் வழங்கப்படும் என அரசாங்கம் முன்பு அறிவித்திருந்தபோதிலும் இந்த தொகையை 15 இலட்சமாக குறைக்க நகர அபிவிருத்தித்துறை தீர்மானித்துள்ளது என்றும் இந்த நட்டஈடு போதாது என்று நீதிமன்றத்திடம் தாம் கோரியிருந்ததாகவும் மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார். (எ-1)

# வடக்கு மாகாண சபையை மனமார வாழ்த்துகிறோம்

(யாழ்ப்பாணம்)

நடந்து முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

வடபகுதியில் தொடர்ந்து எமது மக்களுக்கு நல்ல ஆட்சியமைத்து சேவை செய்வீர்கள் என நம்புகின்றோம். தொடர்ந்து உங்கள் அனைவருக்காகவும் திருச்சபைகளாக இணைந்து (ஜெபிப்போம்) பிரார்த்தனை செய்வோம்.

ஆண்டவர் இயேசுவின் ஆசீர்வாதம் உங்கள் அனைவருடனும் இருப்பதாக என யாழ்.கிறிஸ்தவ சபை ஸ்தாபனங்களின் ஐக்கிய செயலாளர் போதகர் கே.சந்திரேஸ்வரன் வாழ்த்தியுள்ளார். (அ)

# அரசின் அச்சுறுத்தல்களுக்கு வடக்கு மக்கள் அஞ்சவில்லை

## மங்கள எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாது ஜனநாயக உரிமையான வாக்குகளைப் பயன்படுத்தியுள்ள வடக்கு மக்கள் தேர்தல் முடிவுகள் மூலம் தென் பகுதி மக்களுக்கு சிறந்த பாடத்தை கற்பித்துள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை நிச்சயமாக தோற்கடிக்க முடியும். இதற்காக மஹிந்த அரசுக்கு எதிரான சகல அரசியல் சக்திகளும் அரசியல் மேடைக்குள் வரவேண்டும் என்பதை நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல் தெளிவாக காட்டியுள்ளது.

இந்த தேர்தல் முடிவானது எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான பிரதான எதிர்க்கட்சி வெற்றிபெற முடியும் என்பதை காட்டியுள்ளது. இதனால் அரசுக்கு எதிரான சகல சக்திகளும் ஒன்றாக இணைய வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசாங்கம் வடபகுதி மக்களுக்கு அச்சுறுத்தல்களை விடுத்து அழுத்தங்களை கொடுத்து சவால்களை ஏற்படுத்தியிருந்தாலும் எதற்கும் அஞ்சாது தமது ஜனநாயக உரிமையான வாக்குகளை அந்த மக்கள் பயன்படுத்தியுள்ளனர். வடக்கு மக்கள் தேர்தல் முடிவுகள் மூலம் தென்பகுதி மக்களுக்கு சிறந்த பாடத்தை கற்பித்துள்ளனர் எனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (அ-5)

# த.தே.கூட்டமைப்பின் வெற்றி இலங். அரசுக்கு தகுந்த பாடம்

## நாம் தமிழர் கட்சி அறிக்கை

(சென்னை)

**உலக நாடுகள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக இலங்கை அரசால் நடத்தப்பட்ட வடமாகாணத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஈழத் தமிழ் மக்கள் அளித்துள்ள மாபெரும் வெற்றியானது தமிழினத்தை அழித்த இலங்கை அரசுக்கு தமிழர்கள் புகட்டியுள்ள ஒரு பாடமாகும் என நாம் தமிழர் கட்சி தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக நாம் தமிழர் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடும் அச்சுறுத்தல் செய்து தமிழர்களை வாக்குச் சாவடிக்கு செல்ல விடாது செய்து அதன்மூலம் தாங்கள் விரும்பும் பொம்மை அரசை ஏற்படுத்த இலங்கை அரசு செய்த முயற்சியை தமிழ் மக்கள் துணிந்து வாக்களித்து முறியடித்துள்ளனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வடமாகாண தமிழ் மக்கள் அளித்த இந்த தீர்ப்பை, இலங்கையின் ஒற்றுமைக்கு உட்பட்டு தாங்கள் வாழவும் இலங்கையின் இறையாண்மைக்கு உட்பட்ட ஒரு தீர்வையே அவர்கள் விரும்புவதை வெளிப்படுத்துவதாக உள்ளது என கூறினால் அதைவிட கடைந்தெடுத்த அரசியல் அயோக்கியத்தனம் எதுவும் இருக்க முடியாது.

ஏனெனில் இந்தத் தேர்தலில் அங்கு நடந்த தமிழின அழிப்புப் போரில் தங்கள் கண வன்மாரை இழந்த 50 ஆயிரம் பெண்கள் வாக்களித்துள்ளனர். தங்கள் பிள்ளைகளை போரில் இழந்த மற்றும் போருக்குப் பின்னர் கடத்தப்பட்டு இன்றுவரை அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று அறியாத இளைஞர்களின் பெற்றோர்கள் பலர் ஆயிரக்கணக்கில் வாக்களித்துள்ளனர்.

மேலும் குண்டு வீச்சில் தாம் பெற்றெடுத்த பச்சிளங் குழந்தைகளை இழந்த தாய்மார்கள் வாக்களித்துள்ளார்கள். இன்னும் தாங்கள் வாழ்ந்த இடங்களை அபகரித்து அங்கு இராணுவ முகாம்களை அமைத்ததால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்துள்ளார்கள். இவர்களின் வாக்குகள்தான் சிங்கள பௌத்த இனவாத அரசின் முன்னேற்ற முகமூடியைக் கிழித்தெறிந்திருக்கின்றன.

எனவே, இந்த வெற்றியை எந்த விதத்திலும் ராஜபக்ஷ அரசும் அதற்கு சகல வழிகளிலும் முட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கும் இந்திய மத்திய காங்கிரஸ் அரசும் தங்களது ஜனநாயக முயற்சிக்கு கிடைத்த வெற்றியாக கூறிக் கொண்டால் அதைவிட பெரிய ஏமாற்றுவித்தை இருக்கவே முடியாது.

இந்திய- இலங்கை அரசுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை அரசமைப்பில் செய்யப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் கீழ் வடமாகாண அரசுக்கு அதிகாரப் பகிர்வு கிடைக்க தொடர்ந்து முயற்சிப்போம் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறியுள்ளார்.

அந்நாட்டு சட்டத்தின்படி தமிழர் மாகாணத்திற்கென்று தனித்த அதிகாரங்கள் எதையும் வழங்குவதற்கு வழியில்லை என்ற நிலையில் அவர்கள் முயற்சி வெற்றி பெறுமா என்பது கேள்விக்குறியே.

சர்வதேசம் கூறும் அந்த அதிகாரப் பரவலும் தமிழர்களுக்கு அரசியல் சம உரிமையும் கிடைக்காமல் போயின் அப்போதாவது தமிழர்களின் அரசியல் விடுதலையை நேர்மையாக ஆதரிக்க உலக நாடுகள் முன்வர வேண்டும்.

தமிழர்களின் அரசியல் தலையெழுத்தை முடிவு செய்ய ஐ.நா. வாயிலாக அங்கு ஒரு பொது வாக்கெடுப்பு நடத்த முன்வர வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## வரவு செலவு திட்டம் நவம்பரில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதத்தின் மூன்றாம் வாரமளவில் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. நவம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு நடைபெறவுள்ள நிலையில் மாநாட்டின் பின்னர் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் என திறைசேரியின் பிரதிச் செயலாளர் எஸ். ஆடிகல தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் மக்களுக்கு நலன்கள் வழங்கப்பட வேண்டுமென கோரி ஜே.வி.பியும் ஐக்கிய தேசியக் கட்சியும் போராட்டங்களை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-5)



நல்லைக்கந்தன் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீன குருமூர்த்த ஆலயத்தில் நடைபெற்ற தெய்வீகத் தொடர் இசைப் பேருரையின் பூர்த்தி விழாவின் போது. ....

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வடக்கில் தனிநாடு அமைக்கும்

### ஹெல உறுமய எச்சரிக்கை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் வெற்றியைப் பயன்படுத்தி வடக்கில் தனிநாடு அமைக்கும் என ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் அரசாங்கம் உடனடியாக மாகாண சபைகளுக்குள்ள அதிகாரங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிச் செயலாளர் உதய கம்மன்பில கூறுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடமாகாண சபைத் தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளனர்.

வடக்கில் கடந்த முப்பது ஆண்டுகளில் வேறு எந்த அரசியல் கட்சிகளும் இவ்வாறு செயற்படவில்லை. அதுமட்டுமன்றி அரசாங்கத்தால் வடமாகாணத்தில் பெரும்பான்மை வாக்குகளைப் பெறவும் முடியவில்லை.

வடக்கு மக்களின் இதயங்களில் போரினால் ஏற்பட்ட காயங்கள் இன்னமும் இருக்கின்றன. அந்நினைவுகளும் அவர்களது இதயங்களில் மாறாது உள்ளன எனவும் தெரிவித்தார். (அ-2)

## சவுதி அரேபியாவில் இருந்து 8,000 பேர் நாடு திரும்பினர்

சவுதி அரேபிய அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட பொதுமன்னிப்புக் காலப் பகுதியில் சட்டவிரோதமாக அந்த நாட்டில் தங்கியிருந்த சுமார் 8 ஆயிரம் பேர் இலங்கை திரும்பியுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சவுதி அரேபியாவிலிருந்து வெளியேறுவதற்காக சுமார் 10 ஆயிரம் பேருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள போதும் இதுவரை நாடு திரும்பாத நிலையில் பலர் அங்கு தங்கியிருப்பதாகவும் அவர்களை உடனடியாக நாடு திரும்புமாறு இங்குள்ள அவர்களின் உறவினர்கள் அழைப்பு விடுக்க வேண்டும் என பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கல ரந்தெனிய குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதியின் பின்னர் அங்கு சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்கள் சுதந்திரமாக நாடு திரும்புவதற்குரிய சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பொதுமன்னிப்பு காலத்தைப் பயன்படுத்தி நாடு திரும்புவோருக்கு விசேட விமான பயணச்சீட்டுக்களை விநியோகிக்கும் நடைமுறை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சவுதி அரேபியாவில் சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கையர்கள் கூடிய விரைவில் நாடு திரும்ப வேண்டும் என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ-5)

## இலங்கை இராணுவ வீரருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பம்

ஹெய்ட்டியில் ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையில் பணியாற்றும் இராணுவ வீரர் ஒருவர் ஹெய்ட்டி பெண்ணொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியமை தொடர்பில் பாரபட்சமற்ற முழுமையான விசாரணைகள் நடத்தப்படும் என இலங்கை இராணுவம் உறுதியளித்துள்ளது.

மூன்று சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளைக் கொண்ட இராணுவ விசாரணை நீதிமன்றத்தை நியமித்துள்ள இராணுவத்தளபதி லெப்டினட் ஜெனரல் தயா ரத்நாயக்க விரிவான விசாரணைகளை நடத்துவதற்காக அவர்களை ஹெய்ட்டிக்கு அனுப்பியுள்ளார்.

ஏற்கனவே இந்தச் சம்பவம் குறித்து ஹெய்ட்டியில் உள்ள ஐ.நா அமைதி காக்கும் படைப் பிரிவின் இலங்கைப் படையினருக்கான இராணுவ பொலிஸ் பிரிவு கட்டளை அதிகாரி விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

இந்த நிலையில் இலங்கை இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க ,மேஜர் ஜெனரல் என்.ஏ.ஜே.சி.டயஸ், மேஜர் ஜெனரல் ஈ.கே.ஜே.கே. விஜயசிறி, பிரிகேடியர் ராஜா பத்திரண ஆகியோர் இந்த இராணுவ நீதிமன்றத்தின் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேஜர் எச்.எஸ்.கே.ஜயசிங்க, மேஜர் எல்.ஜீ.ஏபா ஆகியோர் இராணுவ விசாரணை நீதிமன்றத்தின் ஏனைய அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். (அ-7)

## சீரடி சாய்பாபா அவதார தினம்

யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தினால் நடத்தப்படும் சீரடி சாயிபாபா அவதார தின நிகழ்வுகள் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு யாழ்ப்பாண நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இவ் அவதார தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் 3.30 மணிக்கு சீரடி சாயி சற்சரித வாசிப்பு இடம்பெற்று வருகிறது. இறுதிநாள் வாசிப்பு 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (அ-5)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

# 17.09.2013-17.10.2013



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்

**வியாழனை இராசிநாதனாகக் கொண்ட தனுசு இராசி அன்பர்களே!**

**நட்பு வட்டம் விரியும்!**

புரட்டாதிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே; உற்சாகத்தோடு பணி புரிவீர்கள். உள்ளத்தில் மகிழ்ச்சியும் இல்லத்தில் உள்ளவர்களுக்கு திருப்தியும் ஏற்படும் மாதமாக இம்மாதம் அமையப்போகிறது.

இதுவரை நடைபெறாமல் ஸ்தம்பித்திருந்த காரியங்கள், இப்பொழுது துரிதமாக நடைபெறும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். உங்களின் கூட்டு முயற்சிக்கு இதுவரை ஒத்துழைப்புச் செய்யாது விலகி இருந்தவர்கள்கூட உதவிக்கரம் நீட்டுவதாக ஒப்புக் கொள்வார்கள். வியாபார விரோதம் விலகும்.

பொதுவாக நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவர வேண்டுமானால் பொன்னவன் என்று வர்ணிக்கப்படும் குருவின் பூரணமான பார்வை பதிய வேண்டும். மேலும் தனாதிபதி லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்க வேண்டும். தொழில் ஸ்தானாதிபதி தொழில் ஸ்தானத்தில் பலம்பெற வேண்டும். அந்த அடிப்படையில் மாதத்தின் முதல் 5 நாட்கள் அமைந்திருக்கின்றன.

அதன்பிறகு தொழில் ஸ்தானாதிபதி லாப ஸ்தானத்திற்கு செல்கிறார். எனவே, உங்களுக்கு மாதம் முழுவதும் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறும். பணவரவு திருப்திதரும். பாராட்டு மழையில் நனைவீர்கள். என்ன இருந்தாலும் 8 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியைப் பார்க்கிறார். எனவே, உங்களுக்கோ உங்களைச் சார்ந்த குடும்பத்தினருக்கோ வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலத் தொல்லைகளால் மன உளைச்சல் ஏற்படும்.

எனவே, செவ்வாய், சனி பார்வை காலத்தில் சிறப்புப் பரிகாரங்கள் செய்வது நல்லது. எந்த நட்சத்திரத்தில் எந்த நாளில் எந்த தெய்வத்தை வழிபட வேண்டுமோ அந்த நாளில் அந்த நட்சத்திரத்தில் அந்த தெய்வத்தை வழிபட்டால் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். அதற்கு உறுதுணையாக இருப்பது உங்கள் சுயஜாதகங்கள். பொதுவாக குருவழிபாடும் அங்காரக வழிபாடும் குழப்பங்களைத் தீர்க்கும்.

**பொன்னான புதனின் சஞ்சாரம்!**

செப்டொம்பர் 22 ஆம் திகதி துலாம் இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 7,10க்கு அதிபதியான புதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, வாழ்க்கைத் துணை வழியிலும் வரவு வந்து சேரும். வரவேண்டிய பாக்கிகளும் வசூலாகும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்வீர்கள். பொருளாதார மேம்பாடு அதிகரிக்கும் இந்த நேரத்தில் இதைச் செய்வோமா? அதைச் செய்வோமா? என்ற சிந்தனை மேலோங்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். குடும்பத்தில் இருந்த பிணக்குகள் அகலும். பிரபலமானவர்களின் ஒத்துழைப்போடு புதிய திட்டங்களை நிறைவேற்றிக்கொள்வீர்கள்.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

அக்டோபர் 3 ஆம் திகதி விருச்சிக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார் 6 க்கு அதிபதி 12 இல் சஞ்சரிப்பதால் விபரீத ராஜயோக அடிப்படையில் சில நல்ல மாற்றங்களும் உங்களுக்கு வந்து சேரும். பயணங்களால் பலன் கிடைக்கும். பெண்களால் வந்த பிரச்சினை அகலும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி தங்கம், வெள்ளி போன்ற நகைகளை வாங்கி மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு போன்றவைகள் கிடைக்கும்.

**சிம்ம செவ்வாயின் சஞ்சாரம்!**

அக்டோபர் 8 ஆம் திகதி சிம்ம இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக புதிய கூட்டாளிகள் வந்திணைந்து உங்கள் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொடுப்பர். பூமி, இடம் விற்பனையில் லாபம் கிடைக்கும். புதிய திருப்பங்களும் பொன்னான வாய்ப்புக்களும வந்து சேரும். அரசியலில் பதவி வாய்ப்புக்களை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு வந்து கை கூடுவதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும்.

இம்மாதம் தென்முகக் கடவுளை இன்முகத்தோடு வழிபட நன்மைகள் வந்து சேரும்.

# பாராட்டு மழையில் நனைவீர்கள்!

# சிவல்புரி சிங்காரம்



## மகரம்

உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

**சனியை இராசிநாதனாகக் கொண்ட மகர இராசி அன்பர்களே!**

**அக்டோபர் 8 க்கு மேல் அஷ்டமத்தில் செவ்வாய்!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அதேநேரத்தில் சந்திர மங்கல யோகத்தோடு மாதத் தொடக்கம் அமைகிறது. உச்சம்பெற்ற சனியோடு அந்த வீட்டிற்கு அதிபதியான சுக்ரனும் இணைந்திருக்கிறார். எனவே, தொழில் வளர்ச்சியில் தொல்லை தந்தவர்கள் விலகுவர். புதிய ஒப்பந்தங்கள் வந்து அலைமோதும்.

பொருளாதாரத்தை உயர்த்த நண்பர்கள கைகொடுத்து உதவுவர். பெண்களால் நன்மை கிட்டும். என்ன இருந்தாலும் அஷ்டம ஸ்தானத்தில் அல்லவா செவ்வாய் வரப்போகிறார். எனவே, அக்டோபர் 8 க்கு மேல் அதிக விழிப்புணர்ச்சியுடன் செயற்படவேண்டும். அதுமட்டுமல்ல வாகனங்களில் செல்லும் பொழுதும் கவனம் தேவை. வாங்கிய சொத்துக்களை பாதுகாப்பதிலும் கவனம் தேவை. வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்து கொடுக்கும் நண்பர்களிடமும் கவன்மாக இருந்தால் தான் ஏமாற்றங்களில் இருந்து விடுபட இயலும்.

மாபெரும் கிரகங்களாக விளங்கும் சனியோ, ராகுவோ, கேதுவோ, செவ்வாயோ அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் பொழுது கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் செயற்பட்டால்தான் பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்கும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டு புதிய வாகனங்கள் வாங்குவது நல்லது. புதிய வாகனங்கள் சமீபத்தில் வாங்கியவர்கள் அதை வைத்திருக்க வேண்டுமானால் தேவையான பரிகாரங்களை மட்டும் செய்து விட்டு வைத்துக் கொள்ளலாம். காரியங்கள் கைகூடுவதுபோல் தோன்றி இழிபறி நிலைக்குச் செல்லும். நட்பை பகையாக்கிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். மாதக் க்டைசியில் மருத்துவச் செலவுகள் கூடும். சோதனைகளைச் சாதனையாக்கிப் பார்க்கச் சோர்வின்றி வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. அந்த அடிப்படையில் விநாயகருக்கு அருகம் புல் மாலை சூட்டி விநாயகர் கவனம் பாடி வழிபாடு செய்யுங்கள். சனீஸ்வர பகவானுக்கு எள் தீபம் ஏற்றி கருநிறக் காகம் ஏறி காசினிதன்னைக் காக்கும் என்ற சனி கவசம் பாடி வழிபாடு செய்யுங்கள். செவ்வாய் பகவானை சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபாடுகள் செய்து வருவது நல்லது. கிரகங்கள் பலம் இழக்கும் நேரத்தில் தெய்வங்களை வழிபாட்டால் ஓரளவேனும் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ள இயலும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

செம்டெம்பர் 22 ஆம் திகதி துலாம் இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 6,9 க்கு அதிபதி 10 இல் சஞ்சரிக்கும் பொழுது உத்தியோக மாற்றங்கள், ஊர் மாற்றங்கள் ஒரு சிலருக்கு உருவாகலாம். நீண்டநாளாக ஏற்பாடு செய்தும் வேலை கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இப்பொழுது புதிய வேலைகள் கிடைப்பதற்கான யோகம் உண்டு. தந்தை வழியில் ஏற்பட்ட விரிசல்கள் அகலும். தொழிலுக்குப் பெற்றோர் வழி ஒத்துழைப்புக் கிடைக்கும். நண்பர்களை மட்டுமே நம்பிச் செயற்பட்டு வந்த நீங்கள் இனி உறவினர்களின் ஒத்துழைப்பையும் காண வைக்கும் நேரமிது.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

சுக்ரன் அக்டோபர் 3 ஆம் திகதி விருச்சிக இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். 5,10 க்கு அதிபதி 11 இல் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இருந்தாலும் செவ்வாய் சனி பார்வை இருப்பதால் நீங்கள் எதிலும் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. அள்ளிக் கொடுக்கும் சுக்ரன் வேண்டிய அளவு பொருளாதாரத்தைக் கொடுத்தாலும் இராசிநாதன் சனி பலம் இழந்திருக்கும் நேரத்தில் இடமாற்றம், வீடு மாற்றம், நாடு மாற்றம், உத்தியோக மாற்றம் உருவாகலாம். விரயங்கள் கூடும். கடன் சுமை அதிகரிக்கும்.

**சிம்ம செவ்வாயின் சஞ்சாரம்!**

சிம்ம இராசியில் அக்டோபர் 8 ஆம் திகதி செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். செவ்வாய், சனி பார்வை மாறினாலும் 8 இல் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். முன்பைக் காட்டிலும் இப்பொழுது மேலும் கவனத்துடன் செயற்பட வேண்டிய நேரமாக அமைகிறது. மனக்கசப்பு தரும் சம்பவங்கள் நடைபெறலாம். குடும்பத்தில் குழப்பங்கள் கூடும். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. இடம், பூமி விற்பனையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். சகோதர வர்க்கத்தினரைச் சார்ந்திருப்பவர்கள் சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும்.இம்மாதம் சனீஸ்வரர் வழிபாடும் பெருமாள் வழிபாடும் அனுமன் வழிபாடும் மேற்கொண்டு வருவது நல்லது.

(தொடரும்)


# புதிய ஒப்பந்தங்கள் வந்து அலைமோதும்!



# சிறுவர் அரங்கம்

585

## நண்பர்களுக்கிடையில் உண்டான பிரச்சினை



ஓர் ஊரில் வர்த்தமானகன் என்றொரு வியாபாரி இருந்தான். அவன் மிகப்பெரிய செல்வந்தன் என்றாலும் அவன் தனது செல்வத்தை மேன்மேலும் பெருக்க வேண்டுமென்றும் விரும்பினான். பணத்தை சும்மா வைத்துக் கொண்டிருக்காமல் அதைக் கொண்டு பெரும் லாபம் ஈட்ட வேண்டும். வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு ஒருவன் ஆர்வமுடையவனாகவும், கடும் உழைப்பாளியாகவும் இருக்க வேண்டும் என்று அவன் நினைத்தான்.

எனவே அவன் ஏராளமான பொருட்களை வாங்கி, அவற்றை வெகுதொலைவிலுள்ள ஒரு ஊரில் விற்பதற்காக எடுத்துச் சென்றான். அவன் பொருட்களை எடுத்துச் சென்ற வண்டியில் இரண்டு காளைமாடுகள் பூட்டப்பட்டிருந்தன. அக்காளை மாடுகளுள் ஒன்றின் பெயர் சஞ்சீவகன். மற்னொன்றின் பெயர் நந்தகன் என்பதாகும்.

அவை பல நாட்கள் வண்டியை இழுத்துக்கொண்டு வேக வேகமாக ஓடி ஒருநாள் ஓர் அடர்ந்த காட்டுப்பகுதியை அடைந்தன. இரவு வேளை என்பதால் தங்கிச் செல்லலாம் என்று வர்த்தகமானகன் வண்டியை நிறுத்த முயன்ற பொழுது பெரும் களைப்புக்கு ஆளான சஞ்சீவகனின் லகான் அறுந்துபோனது. அதே சமயம் வலதுகால் குளம்பு ஒரு குழியில் இடறி, சஞ்சீவகன் நிலை தடுமாறி கீழே விழுந்தது.

சஞ்சீவகன் மீது மிகவும் அன்பு வைத்திருந்த வர்த்தமானகன் இதனால் பெரும் கவலையடைந்தான். சஞ்சீவகன் குணமாகும் வரை அதன் அருகில் இருக்க தீர்மானித்தான். ஒன்றிரண்டு நாட்கள் கழிந்தன. ஆனால், சஞ்சீவகனோ மிகவும் பலவீனமாக் இருந்தது.

இனிமேலும் தாமதிக்க முடியாது. சரக்குகளை விற்பதற்காக நாம் உடனே புறப்படவேண்டும் என்று வர்த்தமானகன் தீர்மானித்தான்.

அதனால் அவன் சஞ்சீவகனை கவனித்துக்கொள்ள இரண்டு ஆட்களை நியமித்து விட்டு, நந்தகன் என்ற மற்றொரு காளையை வண்டியில் பூட்டிக்கொண்டு கிளம்பினான்.

அருகிலுள்ள ஊரை அடைந்த வர்த்தகமானகன், அங்கு வேறொரு வலிமை மிகக் காளைமாட்டினை வாங்கி, வண்டியில் பூட்டி தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

சஞ்சீவகனை கவனித்துக் கொள்ள நியமிக்கப்பட்டிருந்த இரண்டு ஆட்களும் அதை அப்படியே காட்டில் விட்டு விட்டு, பொய்க்கதை கூறுவதற்காக வர்த்தமானகனைத் தேடிக் கிளம்பினர்.

அவர்கள் வர்த்தமானகனைக் கண்டு வருத்தம் தோய்ந்த குரலில், சஞ்சீவகன் இறந்து விட்டதென்றும் அதற்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகள் அனைத்தையும் மிகுந்த அக்கறையுடன் தாங்கள் செய்துவிட்டதாகவும் கூறினர். வர்த்தமானகன் அக்கதையை நம்பி, மேலும் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.



இதற்கிடையே சஞ்சீவகன் நொண்டியவாறே அக்காட்டில் சுதந்திரமாகத் திரிந்து, ஆற்றங்கரையருகே வளர்ந்திருந்த பசும்புற்களைத்தின்று வந்தது.



விரைவில் அதன் காலில் பட்டிருந்த காயம் குணமடைந்தது. அதற்கு முந்தைய வலிமை வந்தது.

ஒருநாள் அது தன் மனம் போல புற்களை மேய்ந்து கொண்டிருந்த பொழுது தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வண்ணம் உரத்த குரலில் ஒலி எழுப்பியது.

அச்சமயம் பிங்களகன் என்றும் சிங்கம் நீர் அருந்துவதற்காக ஆற்றங்கரைக்கு வந்தது. அது சஞ்சீவகன் எழுப்பிய பயங்கர ஒலியைக் கேட்டது.

அதற்கு முன்பு அது போன்ற ஓர் ஒலியை அது கேட்டதில்லையாகையால் பயத்தால் நடுநடுங்கி அந்த இடத்தை விட்டு அலறிப் புடைத்துக்கொண்டு ஓடியது.

பிங்களகன் இவ்வாறு பயந்து ஓடுவதை தமனகன் மற்றும் கரடகன் என்னும் இரண்டு நரிகள் பார்த்தன.

இந்த இரண்டு நரிகளும் பிங்களனிடம் முன்பு அமைச்சராக இருந்த ஒரு நரியின் மகன்களாகும். இவையிரண்டும் கூட பிங்களகனிடம் பணிபுரிந்தவைதான். என்றாலும் பின்பு பணி நீக்கம் செய்யப்பட்டன. எனினும் மீண்டும் தங்களுக்குப் பிங்களகனிடம் பணி கிடைத்து விடும் என்னும் நம்பிக்கையில் அவை பிங்களகன் செல்லும் இடமெல்லாம் பின்தொடர்ந்து சென்றன.

பிங்களகன் பயந்து ஓடும் வண்ணம் நடந்தது என்ன? தமனகன் ஆச்சரியத்துடன், உரத்த் குரலில் தனது சகோதரனிடம் கேட்டது. அதை நான் கண்டுபிடித்தாக வேண்டும் என்று கூறியது.

உனக்குத் தேவையில்லாதவற்றில் நீ ஏன் தலையிடுகிறாய்? இவ்வாறு தலையிட்டு, தனது உயிரையே மாய்த்துக்கொண்ட குரங்கின் கதை உனக்குத் தெரியாதா? என்று கரடகன், தமனகனிடம் கூறியது.

♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦

## 09.2013 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖ 1513 - ஸ்பானிய நாடுகாண் பயணி பாஸ்கோ நூனியெத் தே பால்போவா பசுபிக் பெருங்கடல் முதன் முதலில் கண்ட ஐரோப்பியர்.

❖ 1789 - அமெரிக்கக் காங்கிரஸ் அரசியலமைப்பிற்கு மனித உரிமைகளுக்கான 10 திருத்தங்கள் உட்பட 12 திருத்தங்களைக்கொண்டு வந்தது.

❖ 1906 - கரையிலிருந்து படகை வழி நடத்தும் முறை ஸ்பெயினில் இயக்கிக் காட்டப்பட்டது. இதுவே தொலை இயக்கியின் பிறப்பு எனக் கருதப்படுகிறது.

❖ 1956 - அத்திலாந்திக் பெருங்கடலைக் கடந்த முதலாவது தொலைபேசிக் கம்பித்திட்டம் நிறுவப்பட்டது.

❖ 11957 - ஐக்கிய அமெரிக்காவின் ஆர்கன்சஸ் மாநிலத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் 9 கறுப்பின மாணவர்கள், 300 இராணுவத்தினர்களின் பாதுகாப்புடன் பாடசாலைக்குச் சென்றனர்.

❖ 1959 - இலங்கைப் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா சோமராம தேரர் என்ற புத்த பிக்கு ஒருவரினால் சுடப்பட்டுப் படுகாயமடைந்து அடுத்த நாள் இறந்தார்.

❖ 1962 - அல்ஜீரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கப்பட்டது.

### பிறப்புகள்

❖ 1897 - வில்லியம் ஃபாக்னர், அமெரிக்க எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1962)

❖ 1899 - உடுமலை நாராயணகவி, தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர், நாடக எழுத்தாளர் (இ.1981)

### இறப்புகள்

❖ 1986 - நிக்கலாய் செமியோனொவ், ரஷ்ய வேதியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1896)

❖ 2003 - எட்வர்ட் செயிட், ஆங்கில ஒப்பாய்வுத் துறை அறிஞர் (பி.1935)

# ஆனி மாதம் பிறந்தவர்களின்

நீங்கள் புத்திக்கூர்மையும் எல்லோரோடும் சரளமாகப் பழகக்கூடிய தன்மையும் மற்றவர்களை ஆளும் திறமையும் செல்வாக்கைப் பயன்படுத்தும் நுட்பமும் கொண்டவர்களாக இருந்து வாழ்க்கையில் முன்னேறி மிகவும் பிரகாசிக்க விரும்புவீர்கள். நீங்கள் பிறரை உற்சாகப்படுத்தி செயலூக்கம் பெறுமாறு செய்வதிலும் வல்லவர்கள். நாம் சிரித்தால் நம்மைச் சூழ்ந்துள்ள உலகமும் நம்மோடு சேர்ந்து சிரிக்கும் என்பது மிதுனத்தின் இயல்பாகும்.

ஆனால் உங்களிடத்தில் இரட்டை மனப்பான்மையும் அமைந்திருக்கும். ஜோதிட ரீதியாகக் கூற வேண்டுமானால் மிதுனத்திற்குரிய மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம் ஆகிய நட்சத்திரங்களில் திருவாதிரையின் முழு ஆதிபத்தியத்திற்குரிய குணா திசயங்கள் உங்களிடம் சிறப்பாக அமைந்திருக்கும். புனர்பூசத்தின் இயல்பு முக்கால் பங்கும் மிருகசீரிடத்தின் இயல்பு அரைப்பங்கும் அமைந்திருக்கும். எனவே உங்களுக்கு இயற்கையாகவே இருவகைத் திறமைகள் சிறப்பாக அமைந்திருக்கும். செய்யும் செயல்களும் சிந்திக்கும் சிந்தனையும் மிகச் சிறப்பாக அமைவதே இரட்டைத் திறமைகளாகும்.

எனவே உங்களுக்கு ஒரு சமயம் இருக்கும் குணமும் மறு சமயம் இருக்காது. உங்களில் பலர் ஷணச்சித்தர்களாகவும் ஷணப்பித்தர்களாகவும் இருப்பதும் உண்டு. ஒன்றை நினைத்து அதில் தொடங்கி நடுவிலேயே அதை விட்டுவிட்டு மற்றொன்றை நினைத்து அதில் கவனம் செலுத்துவீர்கள். உங்களில் பலருக்கு நிரந்தரமான நிலையான கொள்கை இராதாகையால் உங்களிடம் நெருங்கிப் பழகாதவர்களுக்கு உங்களைப் புரிந்துகொள்வது கடினம்.

உங்களுக்குத் தான்கொண்ட கொள்கையிலேயே பிடிப்பும் தன்னம்பிக்கையும் ஏற்பட்டு விட்டால் மாற்றாரின் கருத்துக்குச் செவி சாய்க்காமலும் பிறருடைய அபிப்பிராயத்தை பொருட்படுத்தாமலும் செயலில் இறங்கி அதில் பெரும்பாலும் வெற்றியும் பெறுவீர்கள்.

அந்த வெற்றிக்கு வாய்ப்பளிப்பது உங்களது அழுத்தமான சிந்தனையும் அபூர்வமான தன்னம்பிக்கையும் அப்போதைய சபலப்படாத திட சித்தமுமேயாகும். இந்த மிதுன ராசி புதனுடைய ஆட்சி ஸ்தானத்தில் ஒன்று. அந்த ஸ்தானத்தில் புதன் கிரகம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதன் கதிரியக்கத்தின் அம்சம் இருக்கவே செய்யும். எனவே ஆனிமாதத்தில் பிறந்த உங்களுக்கு அனுபவ ரீதியான அறிவாற்றல்கள், உள்ளுணர்வுகள், உணர்ச்சிகள், நடைமுறைக் கற்பனைகள் எல்லாம் உங்களுக்கு இருந்தாலும் அவற்றில் எது எந்தச் சமயம் மேலோங்கி வேலை செய்யும் என்பது உங்களுக்கே தெரியாது. பாதரசத்தின் மீது ஆதிக்கமுள்ள புதன்கிரகம், உங்கள் இராசிக்கு ஆதிபத்தியம் பெறுவதால் உயர்ந்த னவற்றை எல்லோரும் அடையும் படி செய்வதும் தாழ்ந்தனவற்றை உயர்த்தும் நீங்கள் மட்டுமே நினைத்துச் செயலாற்றினால் முடியக் கூடியதாக இருக்கும். சாதுர்யமாக பேசும் இயல்பு உங்கள் இயற்கைக் குணச்சிறப்பு, ஜோதிட ரீதியில் புதனின் கிரகத்துவம், எழுத்துத்துறை, பேச்சுத்துறை, சிந்திக்கும் துறை ஆகியவற்றின் சிறப்புத் தன்மையை குறிக்கும்.

ஏதாவது ஒரு மகிழ்ச்சி தரும் செயலில் ஈடுபடாமல் இருந்தால் உங்களுக்கு வாழ்க் கையில் சலிப்பு ஏற் பட்டுவிடும். மனித வாழ்வின் பல்வேறு நாட்டங்களை உய்த்துணரும் ஆற்றல் உங்களுக்கு இயல்பாக அமைந்திருக்கும். மனதில் சிந்திக்கும் வகை யிலேயே மனிதன் விளங்குவான் என்பது உங்கள் கருத்தாக வலுப் பெறும்.நீங்கள் சிந்தித்தவற்றை சிறப்பான எழுதி வெளியிடவோ பேசிப் பிறருக்குப் புரிய வைக்கவோ வல்லவராவீர்கள். எதையும் ஊன்றிக் கவனிப்பதும் அவ்வப்போது உற்சாகத்திற்கான செயல் அல்லது சிந்தனையில் ஈடுபடுவதும் உங்கள் இயல்பாக இருக்கும்.




இலக்கியத்துறையில் நீங்கள் சிறப்பாக விளங்குவீர்கள். சொற்களின் உட்பொருட்களையும் உபயோகிக்கும் விதத்தையும் நன்கு உணர்ந்திருப்பீர்கள். சொல்வளமும் சொற்செழுமையம் உங்கள் எழுத்தில் வெளிப்படும்.

## குணாதிசயங்கள்

சந்தேகப்படுவதும் சஞ்சலப்படுவதும் உங்களுக்குள்ள பலவீனங்களாகும். உங்களில் பலருக்கு தத்துவரீதியான சிந்தனையில் ஆர்வம் ஆதிகம் இருக்கும். தத்துவ சமயக் கருத்துக்களை நீங்கள் பெரிதும் ரசிப்பீர்கள். ஆனால் அதிகமாகக் கேள்வி கேட்கும் ஆர்வத்தில் அவசியமானவற்றை அறிய முடியாதவர்களாகி விடுவீர்கள். நீங்கள் எதை உண்மையென்று கருதுவீர்களோ அதுதான் உண்மை என்று வாதம் செய்யும் குணத்தால் உண்மையின் உண்மைநிலையை உள்ளபடி உணரமுடியாமற் செய்துவிடவும் கூடும். உங்கள் செயலுக்கு ஏற்ற வகையில் உங்கள் சிந்தனை வலுவூன்றினால் பெருத்த அளவுக்குப் பயன்படும்.

உங்களுக்கு ஞாபகசக்தியும் அதிகமாக இருக்கும். ஆனால் சந்தர்ப்பங்களிலும் நெருக்கடியான கட்டங்களிலும் அது பயன்பட வேண்டுமே தவிர வேண்டாத விடயங்களையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கக்கூடாது. இல்லையெனில் அது உங்கள் செயலாக்கத்தைக் குறைத்து விடும்.

நீங்கள் எந்த விடயத்தையும் நன்றாக அறிந்து உணர்ந்து திருப்தியடைந்த பிறகே அந்த விடயமாகச் செயற்படவேண்டுமே தவிர அவசரப் படக் கூடாது. வாய்ப்புவரும் போதுசும்மா இருந்துவிடவும் கூடாது. பலர் உங்கள் மீது பொறாமைப் படும் அளவுக்கும் பலரது கவனத்தை ஈர்க்கும் அளவுக்கும் உங்கள் வாழ்க்கை அமையவும் முடியும்.

பொதுவாக நீங்கள் ஒல்லியாகவே இருப்பீர்கள். இளமையாகத் தோற்றமளிக்கும் நீங்கள் முதுமையின் பருவவளர்ச்சிக்குரிய தளர்ச்சியை அடையமாட்டீர்கள். நீங்கள் பெரிய மனிதர்களாக இருந்தாலும் நகைச்சுவைக்குரிய விடயங்களைக் கேட்டாலும் படித்தாலும் பார்த்தாலும் கலகலவென்று வாய்விட்டுச் சிரித்துவிடுவீர்களே தவிர சிரிப்பை அடக்கிக் கொள்ளும் தன்மையைக் காட்டிக்கொள்ள மாட்டீர்கள்.

நீங்கள் பிறரைப் பற்றிய உங்கள் கருத்தை முன்னதாகவே நிச்சயித்துக்கொண்டு விடுவீர்கள். அதையும் விரைவில் யூகித்துக்கொள்ளும் ஆற்றலும் உங்களுக்கு அதிகரிக்கும். தேவைப்பட்டால் நீங்களாகக் கருதினால் உங்கள் கருத்தையும் நினைப்பையும் உடனடியாக மாற்றிக்கொள்ளும் சுபாவமும் உங்களுக்கு உண்டு. (தொடரும்)

# ஜனாதிபதி நாடு திரும்பியதும் மாகாண அமைச்சரவையில் மாற்றம்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த மூன்று மாகாண சபைகளுக்குமான அமைச்சரவைகள் பதவியேற்பதற்கு முன்னர் ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக அரச உயர்மட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபைகளில் எவ்விதமான பிரச்சினைகளும் ஏற்படாதபோதிலும் மத்தியமாகாணத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையினைக் கருத்திற் கொண்டே அமைச்சரவை மாற்றுவதற்கான சாத்தியக் கூறுகள் ஏற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி நாடு திரும்பியதும் இது தொடர்பில் விரிவாக ஆராயப்படும் என்றும் அந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சருக்கு நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தை வழங்கும் வகையிலேயே இந்த மாற்றம் கொண்டுவரப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய மாகாண சபைத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட பிரதமர் தி.மு. ஜயரட்னவின் மகன் அனுராத ஜயரட்ன ஆகக் கூடிய ஒரு இலட்சத்து 7ஆயிரத்து 644 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

அவருக்கு முதலமைச்சர் பதவியை வழங்கும் நோக்கிலேயே அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தை வாபஸ் பெற வேண்டி ஏற்படலாம்

## தே.தேசிய இயக்கத்தின் செயலாளர் தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளமையால் அதனை நடைமுறைப்படுத்துவதோ அல்லது அதற்கு அரசாங்கம் ஆதரவு வழங்குவதோ சட்டத்தை மீறும் செயலாகும் எனத் தெரிவித்துள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் வசந்த பண்டார இவ் விஞ்ஞாபனத்தை வாபஸ் பெற வேண்டிய நிலைமை கூட்டமைப்பிற்கு உருவாகுமெனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபைத் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சி கோலோச்சப் போகின்றது. இனி கூட்டமைப்பினர் முதலாவதாக காணி, பொலிஸ் அதிகாரங்களை பெற்றுக் கொள்வதற்கான மோதலை அரசாங்கத்துடன் ஏற்படுத்திக் கொள்வார்கள்.

அதன் பின்னர் கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்திற்கு அமைவாக தன்னாட்சி அதிகாரம் கேட்டு போராட்டத்தை ஆரம்பிப்பார்கள். இவ்விரு விடயங்களையும் முதன்மைப்படுத்தியே கூட்டமைப்பினர் தேர்தலில் மக்கள் ஆணையைக் கோரினர். இதற்கமைய கூட்டமைப்பிற்கு 2/3 பெரும்பான்மை பலம் கிடைத்துள்ளது.

ஆனால் இலங்கையின் அரசியலமைப்பின் 157 ஆவது சரத்தை மீறும் விதத்தில் பிரிவினையை ஊக்குவித்து கூட்டமைப்பினர் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளனர். இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் நீதிமன்றத்தின் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. எனவே இதற்கு மக்கள் ஆணைகிடைத்திருக்கின்றதென்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார். (அ-7)

# இரசாயன ஆயுதங்களை அழிக்கின்றது சிரியா

## வரவேற்கிறது இலங்கை

சிரியாவிடம் உள்ள இரசாயன ஆயுதங்களை அமைதியான மற்றும் பாதுகாப்பான முறையில் அழிப்பது தொடர்பில் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாட்டை வரவேற்பதாக இலங்கை தெரிவித்துள்ளது.

சிரியாவின் இரசாயன ஆயுதங்கள் தொடர்பான பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வுகாண மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சி வரவேற்கப்படவேண்டியது என இலங்கை வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

இரசாயன ஆயுதங்களுக்கு எதிரான சர்வதேச உடன்பாட்டில் கைச்சாத்திட்ட நாடு என்ற வகையில் இலங்கை ஆயுதங்கள் தயாரிக்கப்படுவதையும் அதனைக் கையிருப்பில் வைத்திருப்பதையும் எதிர்ப்பதோடு முழு உலகத்திலும் உள்ள இரசாயன ஆயுதங்கள் அழிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டையும் கொண்டுள்ளது.

இந்த நிலையில் தன்னிடம் உள்ள இரசாயன ஆயுதங்களை அழிக்க சிரியா எடுத்துள்ள முடிவு வரவேற்கப்படவேண்டியது என வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

எவ்வாறாயினும் 2009 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில்இலங்கைப் படையினர் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டது.

இலங்கைப் படையினர் பொஸ்பரஸ் இரசாயனக் குண்டுகளை பயன்படுத்தியதாகவும் இதன் காரணமாக பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில் சிரியாவின் ஆயுத அழிப்பை இலங்கை வரவேற்றுள்ளமை வியப்பை ஏற்படுத்துவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (அ-7)

# இரட்டை குடியுரிமை வழங்குவதில் தொடர்ந்தும் காலதாமதம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவதில் தொடர்ந்தும் காலதாமதம் நிலவி வருவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தாலி உள்ளிட்ட சில நாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடவடிக்கை இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன் இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடவடிக்கை கடந்த சில ஆண்டுகளாவே இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இரட்டைக் குடியுரிமை வழங்குதல் குறித்த உத்தேச சட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி ஓராண்டு கடந்துள்ளதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலும் காலதாம்தம் ஏற்படுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களமே காரணம் எனவும் இரண்டு சிறிய திருத்தங்களை மேற்கொள்ள ஓராண்டு காலம் எடுத்துக் கொண்டமை நம்பக் கூடியதாக இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மீண்டும் இரட்டைக் குடியுரிமை வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

# மூத்த அரசியல் தலைவர் சங்கரிக்கு போனஸ் ஆசனம் வழங்கப்படுமா?



வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மகத்தான வெற்றியைப் பெற்றுக் கொண்டது என்ற உண்மைகளுக்கு மத்தியில், பல சவால்களுக்கு முகம் கொடுத்து ஓர் இணக்கப்பாடான தமிழ் அரசியல் கள நிலைமையைக் கட்டியெழுப்புவதிலேயே தேர்தல் வெற்றியின் இலக்குத் தங்கியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக சி.வி.விக்னேஸ்வரனைத் தெரிவு செய்ததன் மூலம் இரா.சம்பந்தன் அவர்கள் தனது அரசியல் சாணக்கியத்தை நிரூபித்திருந்தார்.

இப்போது, தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்களில் யாருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவது மற்றும் மகத்தான வெற்றியின் மூலம் கிடைத்திருக்கக்கூடிய இரண்டு போனஸ் ஆசனங்களை யாருக்கு வழங்குவது என்ற இருபெரும் விடயங்களுக்குத் தீர்வு காண்பதிலேயே வடக்கு மாகாண சபையின் வெற்றிகரமான செயலாக்கங்கள் அமையும்.

அந்த வகையில் அமைச்சுப் பதவிகளைப் பொருத்தமானவர்களுக்கு- துறை சார்ந்தவர்களுக்கு வழங்குவது மிகவும் அவசியமானதாகும்.

**இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன் கண் விடல்**

என்ற வள்ளுவரின் முடிவை வைத்துக்கொண்டு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படுமாயின் வினைத்திறன் மிக்க பணிகளை குறித்த அமைச்சுக்களிடமிருந்து எதிர்பார்க்க முடியும்.

இதைவிடுத்து நமக்குத் தெரிந்தவர், தெரிந்தவருக்குத் தெரிந்தவர், இவரை அமைச்சராக்கினால் மட்டுமே எனக்கு ஆதரவு இருக்கும் என்ற குறுகிய நினைப்பில் செயற்பட்டால், தமிழ்மக்களின் வாக்களிப்பு தேர்தலில் வெற்றியாயினும் செயலாக்கத்தில் தோல்வி என்றாகி விடும்.

எனவே இன்னார் இனியார் என்றில்லாமல் பொருத்தமானவர்களுக்கு பொருத்தமான பதவிகளை வழங்கி, சிதைவுற்றுள்ள வடக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்பவேண்டும்.

இதற்கான திட்டத்தை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கூட்டாகத் தயாரிக்கும் என நம்பலாம்.

### போனஸ் ஆசனம்

யாருக்கு அமைச்சுப் பதவியைக் கொடுப்பது என்பதைவிட, மிகவும் முக்கிய விடயம் யாருக்கு போனஸ் ஆசனத்தை வழங்குவதென்பதாகும்.

வடக்குமாகாண சபைத்தேர்தலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பெற்ற அமோக வெற்றியின் காரணமாக, இரண்டு போனஸ் ஆசனங்கள் கிடைக்கப் பெறுகின்றன.

இந்த இரண்டு ஆசனங்களையும் யாருக்கு வழங்குவது என்ற தீர்மானத்தைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மிகவும் நிதானமாக எடுக்கவேண்டியது கட்டாயமானதாகும்.

அந்தவகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு இரண்டு ஆசனங்களில் ஒன்றை வழங்குவது அவசியம் என்பதைப் பலரும் வலியுறுத்துகின்றனர்.

இது தொடர்பில் நேற்றைய தினம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐயாவைச் சந்தித்து அது தொடர்பான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதான தகவல்களும் வெளிவந்துள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி மூத்த அரசியல்வாதி.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் அவரின் வகிபங்கு முக்கியமானது. வடக்கு மாகாண சபைத்தேர்தலில் அவர் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிட்ட போதிலும் துரதிர்ஷ்டவசமாக அவர் வெற்றி பெறமுடியாது போயிற்று.

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக செல்வாக்கு மிக்கவராக இருக்கக் கூடிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்கள், கிளிநொச்சியில் போட்டியிட்ட அரியரட்ணம், குருகுலராஜா, பசுபதிப்பிள்ளை ஆகிய மூவரையும் ஆதரித்துப் பிரசாரம் செய்தார். அந்தப் பிரசாரத்தின் அடிப்படையில் அந்த மூவரும் வெற்றிபெற்றனர்.

மூன்று விருப்பு வாக்குகள் என்ற வரையறைக்குள் ஆனந்தசங்கரிக்கான சந்தர்ப்பம் இழந்து போனது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் வீட்டுச் சின்னத்தில் ஆனந்தசங்கரியையும் நிறுத்திவிட்டு, மூன்று வேட்பாளர்களை மட்டும் குறிவைத்து பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பிரசாரம் செய்தது சரிதானா? என்ற வாதப்பிரதிவாதங்கள் எழுவது நியாயமாயினும் இப்போது அரசியல் தவறுகளுக்கான பரிகாரங்களே தேவை என்பதால், தோஷபரிகாரம் பற்றிச் சிந்திப்பதே நியாயமானது.



# தமிழ் அரசியலுக்கு பாவதோஷ பரிகாரம் செய்யவேண்டும்





### தமிழ் அரசியலில் நடந்த பாவ மன்னிப்புகள்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்பது விடுதலைப்புலிகளால் பாவ மன்னிப்பு வழங்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்ட அமைப்பு என்பது உண்மையாயினும் கூட்டமைப்பில் இருப்பவர்கள் எல்லோரும் புனிதமானவர்கள் என்றோ, எந்தவிதமான தவறுகளையும் இழைக்காதவர்கள் என்றோ, விடுதலைப் புலிகளுக்கு விசுவாசமானவர்கள் என்றோ, எதிர்காலத்திலும் அவர்கள் தவறிழைக்காத தவரிஷிகள் என்றோ யாரும் கூறிவிடமுடியாது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை உருவாக்கியபோது சித்தார்த்தனை ஏற்றுக்கொள்ள விடுதலைப் புலிகள் மறுத்தனர். ஆனால் அதே சித்தார்த்தனை அதிக விருப்புவாக்குடன் கூடிய பெருவெற்றியை யாழ்.மாவட்ட தமிழ் மக்கள் அவருக்கு வழங்கினர்.

ஆக, சந்தர்ப்ப சூழ்நிலைகளால் எடுக்கப்பட்ட முடிவுகள், தீர்மானங்களை வைத்துக்கொண்டு ஒருவரை ஓரங்கட்டுவது பாவச்செயல்.

எங்கள் அரசியல் புலத்தில் நிகழ்ந்துவிட்ட பாவச்செயல்களுக்கான பரிகாரம் தேடுவது தர்மத்தின் வழியில் செல்வதற்கு அவசியமாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி வயதில் மூத்தவர், அரசியல் அனுபவம் மிக்கவர், எதையும் வெளிப்படையாகக் கூறும் தன்மையுடை[illegible]வர்.

தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம், தலைவர்களான சிவசிதம்பரம், இரா.சம்பந்தன் என்ற மிகப்பெரும் அரசியல் தலைவர்களின் வரிசையில் நிற்கின்ற ஆனந்தசங்கரிக்கு போனஸ் ஆசனத்தை வழங்குவதற்கு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சிவாஜிலிங்கம் உட்பட தமிழ் மக்கள் மத்தியில் மிகப் பலமான ஆதரவைப் பெற்று வரும் சிறிதரன் போன்றவர்[illegible] தடையாக இருக்கமாட்ட[illegible]பது தெளிவு.

எனவே தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரிக்குத் தேடிச்சென்று போனஸ் ஆசனத்தை வழங்கி அவரின் வயதிற்கும் அரசியல் அனுபவத்திற்கும் மதிப்பளிக்கவேண்டும். இதைச் செய்வதன் மூலம் ஒரு புனிதமான - விட்டுக் கொடுப்புள்ள- தூய அரசியல் தளத்தை வடக்கில் உருவாக்கமுடியும் என்பது நம் தாழ்மையான கருத்து. இந்த உண்மையை வயதிலும் அரசியல் அனுபவத்திலும் பிதாமகராக இருக்கக்கூடிய சம்பந்தன் நிச்சயமாக உணர்ந்துகொள்வார் என்று நம்பலாம்.

**பகலவன்**

வழங்கப்பட்ட நிதி போதாமையால்

# பகுதிச் சேத வீடுகளை புனரமைக்க முடியவில்லை

(முல்லைத்தீவு)


**முல்லைத்தீவு மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட பகுதியாக சேதமடைந்த வீடுகளை புனரமைப்புச் செய்வதற்கு நிதி வழங்கப்பட்டுள்ள போதிலும் அந்நிதி போதாமையால் அவற்றை முழுமையாக புனரமைப்பு செய்ய முடியவில்லை என அப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

போரால் பாதிக்கப்பட்டு அனைத்து உடைமைகளையும் இழந்த நிலையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இம் மக்கள் இருப்பதற்கு இல்லிடமின்றி எவர் தமக்கு தஞ்சம் அளிப்பர் என்ற ஏக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

போரின் போது கணவனை, மனைவியை, பிள்ளைகளை, பெற்றோரை இழந்தும் ஈடு செய்ய முடியாது கவலையுடன் இவர்கள் வாழ்ந்து வருகின்ற வறுமை நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைப்பதற்கு 2 இலட்சம் ரூபா மட்டும் வழங்கப்பட்டமையால் முழுமையாக வீடுதளை புனரமைக்க முடியாத நிலையில் இவர்கள் உள்ளனர்.

முழுமையாக வீடுகள் புனரமைக்கப்படாமையால் மழை காலத்தில் எங்கு தஞ்சமடைவது என்ற ஏக்கத்துடன் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 52, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 42, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 278, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 713, கரைதுரைப்பற்று பிரதேச செயலர் பிரவில் ஆயிரத்து 147, வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 854 வீடுகளுமாக மொத்தம் 3ஆயிரத்து76 வீடுகள் பகுதிச் சேதத்துக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் உள்ள போதிலும் ஆயிரம் வீடுகளுக்கு மட்டுமே புனரமைப்பதற்கு 2 இலட்சம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.



இந்நிதி போதாமையால் வீடுகளை முழுமையாக புனரமைக்க முடியவில்லை.

எனவே, உரியதரப்பினர் இவற்றை முழுமையாக புனரமைப்பு செய்வதற்கு மேலதிகமான நிதிவழங்க வேண்டுமெனவும் நிதிமுற்றாக ஒதுக்கப்படாத வீடுகளுக்கு நிதியை ஒதுக்கவும் முன்வர வேண்டுமென அப் பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-267)




## வீதி புனரமைக்கப்படவில்லை

(முல்லைத்தீவு)

அளம்பில் கடற்கரை வீதி புனரமைக்கப்படாமையால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

ஒரு கீலோ மீற்றர் நீளம் கொண்ட இவ்வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் விபத்துக்கள் பல இடம் பெறும் சூழ்நிலை காணப்படுகிறது.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் இவ் வீதியை புனரமைத்துத் தரவேண்டுமென பயணிகள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

## வவுனியா பிரதேச செயலக மட்ட மாணவர்களுக்கான ஆற்றல் போட்டிகள்

(பூந்தோட்டம்)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ள சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தினையும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ள மாற்றுவலுவுடையோர் தினத்தினையும் முன்னிட்டு வவுனியா பிரதேச செயலகத்தினால் பாடசாலை மாணவர்களிடையே ஆற்றல் வெளிப்பாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராஜா அறிவித்துள்ளார்.

தரம் -1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களுக்கு எம்மை நாமே பாதுகாப்போம் எனும் தலைப்பிலான அபிநயப் பாடல் போட்டியும் தரம் 6 தொடக்கம் தரம் 8 வரையான மாணவர்களுக்கு முதியோர் அபிவிருத்திக்கான புதிய சக்திகள் எனும் தலைப்பிலான பேச்சுப் போட்டியும் தரம் -9 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எனும் தலைப்பிலான பேச்சுப் போட்டியும் தரம் 12 ,13 மாணவர்களுக்கு வினாவிடைப் போட்டியும் திறந்த போட்டியாக நாடகப் போட்டியும் இடம்பெறவுள் ளதாகவும் பாடசாலை மட்டத்தில் . முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்களை அதி பர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சிறுவர் உரிமைகள் மேம் பாட்டு உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வவுனியா எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (ம-266)

## விபத்தில் ஒருவர் காயம்

(பூந்தோட்டம்)

வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு நோக்கி சென்று கொண்டிருந்தவர் விபத்துக்குள்ளாகி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. வவுனியாவில் இருந்து நெடுங்கேணி வீதியூடாக முல்லைத்தீவு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவரே வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையால் விபத்துக்குள்ளாகி வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்தில் சிக்கியவர் நிர்மலன் எனும் பெயரையுடைய பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.(ம-266)

## விதை நெல்லின் விலை அதிகரிப்பு விவசாயிகள் திண்டாட்டம்

(பூநகரி)

பூநகரி பகுதியில் காலபோக விதைப்பு ஆரம்பமாகியுள்ள நிலையில் நல்ல இன விதை நெல்லின் விலை விஷம் போல் ஏறி ஒருமூடை நெல் 2ஆயிரத்து 500 ரூபா முதல் 2ஆயிரத்து750 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இதனால் தமக்கு தேவையான விதை நெல்லைப் பெறுவதில் பெரும் சிரமம் அடைவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதம் ஒரு மூடை நெல் 2ஆயிரத்து 300 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட நிலையில் இன்று விலை அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு பருவம் தப்பிய மழையால் பெரும்பாலான நெற்காணிகள் அழிவடைந்தமையாலும் முளைத்திறன் அற்ற நெல் கிடைத்தமையினாலுமே விதை நெல்லுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (ம-84)

## முன்பள்ளிகள் இயங்காமையால் அல்லற்படும் மாணவர்கள்

(முல்லைத்தீவு)

முல்லை.மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிவநகர் கிராமத்தில் போருக்கு முன்னர் இயங்கிய இரண்டு முன்பள்ளிகளும் போரினால் சேதமடைந்து தற்போது இயங்காதுள்ளன என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டு இப்பகுதியில்413 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமத்தில் 50 இற்கும் மேற்பட்ட முன்பள்ளி மாணவர்கள் வசிக்கின்றனர்.

இங்கு போருக்கு முன்னர் இயங்கிய 2 முன்பள்ளிகளும் இயங்காமையால் இங்குள்ள மாணவர்கள் அயல் கிராமத்தில் உள்ள முன்பள்ளிகளுக்கே சிரமத்தின் மத்தியில் செல்ல வேண்டிய நிலையுள்ளது.

எனவே, நிரந்தர காணியில் இயங்கிய இம் முன்பள்ளியை புனரமைத்து மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு உதவவேண்டுமென மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

## சுயதொழில் உதவிகள் வழங்கப்படவுள்ளன

(சிவநகர்)

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடனும் யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடனும் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள வறிய குடும்பங்களுக்கு சுயதொழில் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவில் 25 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு தலா 40ஆயிரம் ரூபா வீதம் சுய தொழில் உதவிகள்வழங் கப்படவுள்ளன.

இத் திட்டத்தின் கீழ்பாடசாலை செல்லும் மாணவர்களைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களுக்கே இவ் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளது.(ம-254)

## வவுனியாவில் சிறுமி கடத்தப்பட்டு துஷ்பிரயோகம்

(பூந்தோட்டம்)

வவுனியா பண்டாரிக்குளத்தில் 14 வயதுடைய சிறுமியொருவர் நேற்று முன்தினம் மூவரால் கடத்தப்பட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி ஜெ.ஜெயகெனடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வவுனியா பண்டாரிக்குளத்தில் உள்ள தனது வீட்டிற்கு இச் சிறுமி நடந்து சென்று கொண்டிருந்த சமயம் வான் ஒன்றில் வந்த மூவர் அவரைக் கடத்திச் சென்றதாக சிறுமியின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறுமியை கடத்திச் சென்று துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கிய நபர்கள் மீண்டும் வவுனியாவின் நகர்ப் பகுதியொன்றில் அவரை விட்டுச் சென்றுள்ளனர்.

இதனை கேள்வியுற்ற பிரதேச வாசிகள் சிறுமியை வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதித்துள்ள நிலையில் தற்போது சிறுமிக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். (ம-266)

## மானிய விலையில் உர விநியோகம்

(பூநகரி)

பூநகரி கமநல சேவை நிலைய பிரிவின் கீழ் இயங்கும் 19 கமக்கார அமைப்பு பிரிவுகளில் விவசாயிகளுக்கான மானிய விலையிலான உர விநியோகம், இன்று புதன் கிழமை தொடக்கம் கமநல சேவை நிலையத்தில் விநியோகிக்கப்படவுள்ளதாக பூநகரி கமநல சேவை அலுவலர் அறிவித்துள்ளார்.

மானிய விலையிலான உரத்தை பெறுவதற்கு இவ்வாண்டுக்கான ஏக்கர் வரியை செலுத்தி பற்றுச்சீட்டை பெறுவதுடன் கமக்கார அமைப்பில் வருடாந்த அங்கத்துவ பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் இணைத்து ஒப்படைக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-84)

உயர்ந்த இலட்சியமுடையவன்
பிறர் உயர்வடைய உதவுகிறான்.
- ஹென்றி ஃபோர்டு

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஓர் அன்பு மடல்

அன்புக்குரிய மாகாண சபை உறுப்பினர்களுக்கு அநேக வணக்கம்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய பெருமிதத்தில் இருக்கின்ற உங்களுக்கு அவசரமாக இக் கடிதத்தை எழுத முனைந்தோம்.

தேர்தல் பிரசாரத்திற்கான உங்கள் கடுமையான உழைப்பும் பிரசாரச் செலவும் உங்களுக்கு களைப்பைத் தந்தாலும் நீங்கள் அடைந்த வெற்றி அனைத்துச் சோர்வுக்கும் மருந்தாக அமைந்திருக்கும். கூடவே நீங்கள் கால்நடையாக – வீடு வீடாக அலைந்து திரிந்து செய்த பிரசாரத்தின் பயனாக இப்போது உங்கள் வீடுகள் தோறும் ஆதரவாளர்கள் நிறைந்து கொள்வர்.

சிலவேளை உங்களுக்கு வாக்களிக்காதவர்கள் கூட, வெற்றியின் பக்கம் சாய்ந்து கொள்ளும் தந்திரோபாயத்தின் கீழ் உங்களுக்கு அதிக நெருக்கமாக நின்று கொள்ளலாம்.

இதுதவிர, வெற்றியின் பெருமிதத்தைக் கொண்டாடும் வகையில் மாலை மரியாதைகளும் மேளதாளங்களும் விசேட ஊர்வலங்களும் நடந்து முடியலாம். தேர்தல் வெற்றிக்கான இந்தக் கலாசாரங்களை நீங்கள் விரும்பாவிடினும் உங்கள் ஆதரவாளர்கள் விடமாட்டார்கள் என்பது உண்மை.

எனவே, தேர்தல் வெற்றியை மிக எளிமையாகக் கொண்டாடுவது உங்களை உற்சாகப்படுத்தும் என்ற ளவில் அதனை மக்கள் ஏற்றுக்கொள்வர்.

அதேநேரம் வடக்கு மாகாணசபையின் உறுப்பினராகிவிட்ட நீங்கள் இனிமேல் நேரமில்லை என்ற சொற்பதத்தை அடிக்கடி உச்சரிப்பீர்கள். இதுதவிர உங்களைச் சந்திப்பதற்காகத் தமிழ் மக்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிவரும். அல்லது காத்திருந்தும் சந்திக்க முடியாமல் போகும்.

ஐயாவை இப்போது சந்திக்க முடியாது. அவருக்கு கூட்டம் இருக்கிறது, விழா நடக்கிறது, கொழும்பில் அலுவல் இருக்கிறது என்ற பதில்களும் உங்கள் கந்தோரில் இருந்து கிடைக்கும்.

காத்திருந்து கால்கடுக்க வரிசையில் பாத்து நின்று உங்களுக்கு வாக்களித்தவர்கள் சந்திக்கப்போகும் சம்பவங்கள் தான் இவை. எனவே இத்தகைய சம்பவங்கள் உங்கள் நிர்வாகத்தில் நடந்தேறக் கூடாது என்பதற்காகவே இக்கடிதம் எழுதப்படுகிறது.

அன்புக்குரிய மாகாணசபை உறுப்பினர்களே! நீங்கள் மக்கள் சேவை புரியவேண்டும். பகலிரவு என்று கால. நேரம் பார்க்காமல் எந்த நேரத்திலும் அல்லல்படும் மக்களுக்காக உங்கள் பணியை ஆற்றுங்கள்.

உங்களை நாடி, தேடி வருகின்ற மக்களை ஒருபோதும் அலைக்கழிக்காதீர்கள். எவர் உங்களிடம் வந்தாலும் உங்களால் முடிந்த உதவியைச் செய்யுங்கள்.

கூட்டம், விழா, பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் என்ற படோபகாரத்தில் ஈடுபட்டு பொன்னான நேரத்தை வீணடிக்காதீர்கள்.

மக்கள் சந்திப்புக்கான நேரத்தை ஒதுக்குங்கள். வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பவற்றுக்கு விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்து அவற்றின் இயங்கு நிலைக்கு உதவுங்கள்.

அதிகாரிகள் அலுவலகங்களில் இருப்பதற்கு வழிசமையுங்கள். அமைச்சுக்களின் செயலாளர்கள் 24 மணிநேரமும் வாகனங்களில் ஓடித்திரிவதை தடுத்து நிறுத்தி, கந்தோரில் இருந்து பணி செய்ய ஏற்பாடாற்றுங்கள்.

வடக்கு மாகாணசபையின் சமகால நிர்வாகம் ஒருநாள் வேலை செய்வதற்காக ஆறு நாள் கூட்டம் நடத்தியது. செயலாளர்களின் கதிரைகள் காலியாக இருந்ததே அதிகம். வாகனங்களில் வருவார்கள். வந்தவர் எந்தப் பக்கத்தால் போனார் என்பது தெரியாமல் மாயாஜாலம் நடந்தேறும். இதற்கெல்லாம் அவர்கள் சொல்வது **ஆளுநர் பயம்** என்ற உளநிலை நோயைத்தான். ஆகையால் அதிகாரிகளுக்கு இருக்கவேண்டிய அதிகாரங்களைக் கொடுங்கள். மக்களை மதியுங்கள். மக்களையும் பணியாளர்களையும் மதிக்கின்ற அதிகாரிகளை நியமியுங்கள். உங்கள் பணியை மக்கள் போற்றுவர்.

மாறாக மக்கள் பணியை மறந்து மாலை மரியாதை என்று நீங்கள் தவம் கிடந்தால்,

அட! ஓடித்திரிந்தாலும் ஆளுநர் நிர்வாகம் திறம் என்று மக்கள் சொல்வர்.

# அம்புலன்ஸ் வண்டிச் சாரதி கடமையில் இல்லாது மாயம்!

## அவதிக்குள்ளானர் இளம் குடும்பப் பெண்

(முல்லைத்தீவு)

அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகக் காணப்படுகின்ற அம்புலன்ஸ் சேவையின் அலட்சியம் காரணமாக உயிர் ஆபத்து ஏற்பட்டிருக்கக் கூடிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் உள்ள கொக்கிளாய் வைத்தியசாலையிலேயே இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

அதே பிரதேசத்தில் வசிக்கும் இளம் குடும்பப் பெண் ஒருவருக்கு மாலை 5 மணியளவில் நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது. உடனடியாக அவர் அருகிலுள்ள கொக்கிளாய் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார்.

அதன்போது அவரை மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அதற்காக கொக்கிளாய் வைத்திய சாலையின் நோயாளர்காவு வண்டிச் சேவையை நாடிய போது வாகனம் மட்டும் வைத்தியசாலையில் தரித்திருக்க சாரதி அங்கிருக்கவில்லை.

வைத்தியசாலை முழுவதும் அருகிலும் சாரதியைத் தேடியும் அவர் அகப்படவில்லை.

இதனால் பிரஸ்தாப குடும்பப் பெண் அரைமணித்தியாலங்கள்வரை நெஞ்சுவலியால் தொடர்ந்தும் சிகிச்சை இன்றி பரிதவித்த நிலையில் இருந்துள்ளார்.

பின்னர் அவருடன் வந்த உறவினர்கள் வைத்தியசாலைக்கு அருகில் நின்ற வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் கூலர் ரக வாகனத்தை வரவழைத்து அதில் பிரஸ்தாப குடும்பப்பெண்ணை ஏற்றிக் கொண்டு இரவு 6.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காக கொண்டு சென்று அனுமதித்துள்ளனர்.

24 மணித்தியாலங்களும் தயார் நிலையில் இருக்கவேண்டிய நோயாளர்காவு வண்டிச் சேவை சாரதியினதும் வைத்தியசாலை நிர்வாகத்தினதும் கவனக்குறைவில் செயலிழந்திருந்தமை பாரதூரமான விடயமாகும்.

இதேவேளை நோயாளர்காவு வண்டிச் சேவை உரிய நேரத்திற்கு பயன் படாதிருந்தமை குறித்து. கொக்கிளாய் மக்கள் பெரும் விசனம் வெளியிட்டுள்ளனர். (செ-267)

## கஜேந்திரனுக்கு ரி.ஐ.டி அழைப்பு



(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத குற்றப் புலனாய்வு பிரிவினர் (ரி.ஐ.டி) விசாரணைக்கு அழைத்துள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

முதற்கட்ட விசாரணையின் தொடர்ச்சி என்றும் ரி.ஐ.டியினரின் யாழ். மாவட்ட அலுவலகத்திற்கு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு வருமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## ஸ்ரீ அம்மா பகவான் ஆன்மீக பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தினால் நடத்தப்படும் ஸ்ரீ அம்மா பகவான் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது.

இப்பிரார்த்தனை நிகழ்வில் உடல் ஆரோக்கியத்துக்கான பிரார்த்தனை ஸ்ரீ மாஜியின் நெறிப்படுத்தலில் நடைபெறவுள்ளது. (செ-5)

## பரீட்சார்த்த முறையில் அன்னாசிச் செய்கை

(சாவகச்சேரி)

கல்வயல் பகுதியில் பரீட்சார்த்த முறையில் பயிர் செய்யப்பட்ட அன்னாசி துண்டங்களை நேற்று யாழ்.மாவட்ட விவசாய திணைக்களத்தினரும் குழுவினரும் பார்வையிட்டுள்ளனர்.

மேற்படி பிரதேசத்திற்கு வருகை தந்த குழுவினர் அன்னாசி துண்டங்கள் செய்கை தொடர்பான விளக்கங்களை அளித்ததுடன் அனைத்து விவசாயிகளும் அன்னாசி செய்கையினை மேற்கொள்ள முன்வருவதனூடாக அன்னாசி செய்கையை ஊக்குவிக்க முடியுமென தெரிவித்துள்ளனர். (செ-9-29)

## பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக ஆசிரிய நிலைய முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் ஆகக் குறைந்த 3 வருடமேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவராகவும் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை வகுப்பு 3 மற்றும் யாழ்.மாவட்ட பாடசாலையைச் சேர்ந்த இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, 2-1 ஐச் சேர்ந்தவராகவும் முதுநிலைப் பட்டம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

இப்பதவிக்கு இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை வகுப்பு 3 இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் மட்டுமே ஆ.சே 1, இ.ஆ.சே 2-1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து தெரிவு மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர் தங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்தள்ளார். (அ-7)

## கட்டட பிளாட் இடிந்ததில் மாணவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இணுவில் மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் கட்டடம் ஒன்றின் பிளாட் திடீரென இடிந்து விழுந்ததில் மாணவன் ஒருவன் படுகாயமடைந்ததோடு மேலும் ஒரு ஆசிரியரும், மாணவன் ஒருவனும் சிறுகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் காலையில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அக்கல்லூரியில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்றுவரும் பாலச்சந்திரன் கஜமுகன் (வயது 16) என்ற மாணவனே தலையிலும் காலிலும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நா.சிவநாதன் (வயது 46) என்ற ஆசிரியரும் மாணவன் ஒருவனும் சிறுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-6)

## தலைமைத்துவ பயிற்சி வேலைத்திட்டம்

இலங்கை இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மேலதிக செயற்பாட்டு தலைமைத்துவ பயிற்சி வேலைத்திட்டம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4,5,6 ஆம் திகதிகளில் நாவல தேசிய இளைஞர் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.


செயற்குழு மன்றம் மற்றும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் சகலருக்குமாக இப்பயிற்சி அமையவுள்ளது.

இச்செயற்பாடு தலைமைத்துவ ஆற்றலைப் பெருக்குவதோடு குழுச் செயற்பாடுகள் செயற்றிட்டங்களை வலுவாக்குவதற்கும் பயனுள்ளதாக அமையவுள்ளது.

அனைத்து இலங்கை இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களையும் தவறாது இச்செயற்றிட்டங்களில் கலந்து கொள்ளுமாறு செயற்றிட்டப் பணிப்பாளர் மிலிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டுள்ளார். (அ-7-23)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### மரம் போல் வளையுங்கள்



❖ உலகின் நான்கு திசைகளிலும் பிரயாணம் செய்தாலும், உண்மையான தர்மத்தை ஓரிடத்திலும் காண முடியாது. தர்மம் என்பது அவரவர் மனதைப் பொறுத்த விஷயம்.

❖ எல்லா மனிதர்களிடமும் இறைவன் இருக்கிறான். ஆனால், இறைவனிடத்தில் எல்லா மனிதர்களும் இல்லை. இதனால்தான் மனிதர்கள் துன்பப்படுகின்றனர்.

❖ பிறர் மீது குற்றம் கண்டுபிடித்துப் பொழுதைக் கழிப்பவன் தன் வாழ்நாளை விரயம் செய்தவன் ஆகிறான்.

❖ இறைவனை வெளியில் தேடுவது அறியாமை. தனக்குள்ளே இறைவன் இருப்பதை உணர்வதே அறிவுடைமை.

❖ கனிகள் நிறைந்த மரம் கனத்தினால் தாழ்ந்து வளையும். அதுபோல செல்வச்செழிப்பு மிக்க பணக்காரனும் அடக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

❖ பணம் எவனுக்கு அடிமையோ, அவன்தான் உண்மையான மனிதன். பணத்தை எப்படி உபயோகிப்பது என்பதை அறியாதவர்கள் மனிதனாக வாழத் தகுதியற்றவர்கள்.

## 100 வாரங்கள் முதலிடத்தில்...



சேர்பிய டெனிஸ் நட்சத்திரம் நோவக் ஜோகோவிச், தரவரிசையில் 100 வாரங்கள் முதலிடத்தில் இருந்து புதிய சாதனையை எட்டியுள்ளார்.

அத்துடன், 100 வாரங்கள் முதலிடத்தில் இருந்த வீரர்கள் பட்டியலில் ஆண்ட்ரே அகாசி (101 வாரங்கள்), ரபேல் நடால் (102), ஜோர்ன் போர்க் (109), ஜான் மெக்என்ரோ (170), ஜிம்மி கானர்ஸ் (268), இவான் லெண்டில் (270), பீட் சாம்ப்ராஸ் (286), ரோஜர் பெடரர் (302) ஆகியோருடன் 9ஆவது வீரராக ஜோகோவிச் இணைந்துள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஜோகோவிச் முதலிடத்தை பிடித்தார். அதன் பின்னர் 2012ஆம் ஆண்டு 3 மாதங்கள் பெடரரிடம் முதலிடத்தை இழந்தார். ஆனால் அந்த ஆண்டு நவம்பர் மாதம் மீண்டும் முதலிடத்தை பிடித்தார். நம்பர்-1 வீரர் என்ற பெருமையுடன் இந்த ஆண்டை நிறைவு செய்யும் முனைப்பில் உள்ள ஜோகோவிச்சுக்கு நடால் கடும் சவாலாக இருக்கிறார்.

# இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையின் விளம்பரத் தூதுவராக விராட் கோஹ்லி

இந்திய எல்லைப் பாதுகாப்பு படையின் விளம்பர தூதராக இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோஹ்லி நியமிக்கப்பட்டுள்ளார். இதுதொடர்பான அறிவிப்பு டில்லியில் நடந்த நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டது. அர்ஜுனா விருது பெற்றுள்ள கோலிக்கு, இந்த விழாவின்போது எல்லைப் பாதுகாப்புப் படையின் அடையாளங்களை, மத்திய உள்துறை இணை அமைச்சர் ஆர்.பி.என்.சிங் அளித்தார்.

எல்லைப் பாதுகாப்புப் படை, தனக்கென ஒரு விளம்பர தூதரை உருவாக்கியிருப்பது வரலாற்றிலேயே இதுதான் முதல் முறையாகும்.

தலையில் அணியும் தொப்பியும், எல்லைப் பாதுகாப்புப் படையின் லோகோவும் கோஹ்லிக்கு அளிக்கப்பட்டன. அதை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டார் கோஹ்லி.

டில்லியில் நடைபெற்ற விழாவில் இதற்கான பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டபோது பேசிய வீராட் கோஹ்லி,

நாட்டின் 6000 கிலோமீற்றர் எல்லைப் பகுதியை காக்கும் படை வீரனைப் போன்ற உணர்வு என்க்கு வருகிறது என்றார் கோஹ்லி.

எல்லைப் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களை சந்தித்து அவர்களை பாராட்டி, ஊக்கப்படுத்த போவதாக தெரிவித்தார்.



**நாட்டின் 6000 கிலோமீற்றர் எல்லைப் பகுதியை காக்கும் படை வீரனைப் போன்ற உணர்வு எனக்கு வருகிறது என்கிறார் கோஹ்லி**

மேலும், எல்லை பாதுகாப்பு பணியின் சிறப்பையும், பெருமையையும் விளக்கி பிரச்சாரம் மேற்கொள்ளப் போவதாகவும் கூறினார். இந்த விழாவில், அமைச்சர் ஆர்.பி.என். சிங், இராணுவ உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# மேலும் 4 வீரர்கள் மீது சூதாட்ட குற்றச்சாட்டு

ஆறாவது பிறிமியர் கிரிக்கெட் தொடரில், சூதாட்டத்தில் ஈடுபட்டதாக மேலும் 4 வீரர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த பிறிமியர் கிரிக்கெட்டில் சூதாட்டத்தில் ஈடுபட்ட ராஜஸ்தான் வீரர்கள் ஸ்ரீசாந்த், அங்கித் சவானுக்கு, இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) சார்பில் வாழ்நாள் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் மும்பை பொலிசாரின் புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி, மும்பை பொலிசில் சிக்கிய சந்திரேஷ் ஷிவ்லால் படேல் என்ற தரகர், ஐதராபாத் அணியின் நான்கு வீரர்களை, புனேயில் சந்தித்து சூதாட்டம் தொடர்பாக ரூ. 6 கோடி வரை பேசியதாக, தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கடந்த ஜூன் 17இல் மும்பை பொலிசிடம், சந்திரேஷ் ஷிவ்லால் படேல் அளித்த வாக்குமூலத்தின் விவரம்:

லீ மெரிடியன் ஹொட்டலில் சூதாட்ட தரகர் ஆமிரின் நண்பர் சுனில், ஐதராபாத் அணியின வீரர்களான இலங்கையின் திசாரா பெரேரா, இந்தியாவின் ஹனுமா விகாரி, கரண் சர்மா, ஆஷிஸ் ரெட்டி மற்றும் இவரது சகோதரர் பிரீதம் ரெட்டியை அறிமுகம் செய்தார்.

அப்போது பிரீதம், என்ன வேண்டும், என கேட்டார். இதற்கு நான், புனே அணிக்கு எதிரான போட்டியில் ஐதராபாத் அணி, 10 ஓவரில் 60 ஓட்டங்களை தாண்டக் கூடாது. 20 ஓவரில் 140 ஓட்டத்திற்கு மேல் எடுக்க வேண்டாம். போட்டியில் ஐதராபாத் தோற்க வேண்டும். தவிர, சூதாடடம் செய்ய வசதியாக சில சைகைகள் வேண்டும், என கேட்டேன்.

மறுநாள் என்னை தொடர்பு கொண்ட ஆமிர், இரண்டாவது ஓவரில் ஐதராபாத் வீரர் அவுட்டாகி 'சைகை' தருவார், என்றார்.

இதன்படி, ஏப்., 17இல் புனே அணிக்கு எதிரான போட்டியில், 2ஆவது ஓவரில் ஐதராபாத் வீரர் (குயின்டன் டி காக்) ஆட்டமிழந்தார். முதல் 10 ஓவரில் 5 விக்கெட் டுக்கு 42 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. இதனால், தரகர்களுக்கு ரூ. 3.5 கோடி கிடைத்தது.

ஆனால், போட்டியில் தோற்பது (ரூ. 9 கோடி) குறித்து, ஒப்பந்தம் இல்லை. கடைசியில் ஐதராபாத் அணி வெற்றிபெற, இழப்பு ஏற்பட்டது.

இவ்வாறு சந்திரேஷ் ஷிவ்லால் படேல் தெரிவித்துள்ளாக தெரிகிறது.

இச்செய்தி தொடர்பாக தனது கருத்தை வெளியிட்டுள்ள இலங்கை கிரிக்கெட் சபை, அவ்வாறான எந்தவொரு விடயம் தொடர்பாகவும் அதிகாரிகளிடமிருந்து முறைப்பாடுகள் எவையும் கிடைக்கப்பெற வில்லை எனவும், இலங்கை வீரர்கள் மீது முழுமையான நம்பிக்கை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

# மழை காரணமாக இரு போட்டிகள் இரத்து

ஆமதாபாத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற இருந்த சம்பியன்ஸ் லீக் தொடரின் இரு போட்டிகளும் கனமழை காரணமாக இரத்து செய்யப்பட்டன.

இந்தியாவில், ஐந்தாவது சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 தொடர் நடைபெற்று வருகிறது. ஆமதாபாத்தில் உள்ள சர்தார் படேல் மைதானத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற 'ஏ' பிரிவு லீக் போட்டியில், பெர்த் ஸ்கார்ச்சர்ஸ்(அவுஸ்திரேலியா), ஹைவெல்டு லயன்ஸ் (தென்னாபிரிக்கா) அணிகள் மோதின.



நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற லயன்ஸ் அணி தலைவர் ஆல்விரோ பீட்டர்சன், களத்தடுப்பைத் தேர்வுசெய்தார். கனமழை காரணமாக போட்டியை நடத்துவதில் தாமதம் ஏற்பட்டது. மைதானத்தில் தண்ணீர் தேங்கி இருந்தது, குறிப்பிட்ட நேரத்துக்கு பின் மழை நீடித்தது போன்ற காரணங்களால், போட்டி இரத்து செய்யப்பட்டது. இதனையடுத்து, இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் வழங்கப்பட்டன.

மற்றொரு "ஏ" பிரிவு லீக் போட்டியில், மும்பை (இந்தியா), ஒடாகோ வோல்ட்ஸ் (நியூசிலாந்து) அணிகள் மோத இருந்தன. கனமழை மற்றும் மைதானத்தில் தண்ணீர் தேங்கி இருந்ததால், நாணயச் சுழற்சி கூட போடாத நிலையில் போட்டி இரத்து செய்யப்பட்டது. மும்பை, ஒடாகோ அணிகளுக்கு தலா 2 புள்ளிகள் பகிர்ந்து வழங்கப்பட்டன.

# ஆஸஷ் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு

## முதல் டெஸ்ட் நவம்பர் 21

அவுஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ஆஷஷ் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ள இங்கிலாந்துக் குழாமை இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

17 பேர் கொண்ட குழாமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 21ஆம் திகதி ஆரம் பிக்கவுள்ள இத்தொடர் பிறிஸ் பேணில் இடம்பெறவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டியுடன் ஆரம்பிக்கவுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள 17 பேர் கொண்ட குழாம் அலஸ்ரெயர் குக் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ளதோடு, இவ்வருடத்திற்கான ஆஷஷ் குழாமில் இடம்பெற்றிருந்த கிரஹாம் ஒனி யன்ஸ், ரிம் பிரெஸ்னன், சைமன் கெரிங்ரன் ஆகியோருக்கு ஆஷஷ் வாய்ப்புக் கிடைக்கப்பெறவில்லை. அத் தோடு, எதிர்பார்க்கப்பட்ட வீரரான நிக் கொம்ப்டனுக்கும் இந்த வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அண்மையில் நிறைவடைந்த ஆஷஷ் தொடரில் இடம்பெற்றிருக்காத கிறிஸ் ட்ரெம்வெலட், போய்ட் ராங்கின், பென் ஸ்ரோக்ஸ், கரி பலன்ஸ், மைக்கல் கர்பெரி ஆகியோருக்கு இத்தொடரில் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றுள்ளதோடு, ஸ்டீவன் ஃபின், மொன்ரி பனசர் இருவருக்கும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்றுள்ளது.

**அறிவிக்கப்பட்டுள்ள டெஸ்ட் அணி:**

அலஸ்ரெயர் குக், மற் பிரயர், ஜேம்ஸ் அன்டர்சன், ஜொனி பெயர்ஸ்ரோ, கரி பலன்ஸ், இயன் பெல், ஸ்ருவேர்ட் ப்ரோட், மைக் கல் கர்பெரி, ஸ்டீவன் ஃபின், மொன்ரி பனசர், கெவின் பீற்றர்சன், போய்ட் ராங்கின், ஜோ றூட், பென் ஸ்ரோக்ஸ், கிறேம் ஸ்வான், கிறிஸ ட்ரெம்லெட், ஜொனதன் ட்ரொட்

# அடித்து நொருக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.அளவெட்டிப் பகுதியில் இனந்தெரியாத நபர்களினால் அடித்து நொருக்கப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்றினை தெல்லிப்பழை பொலிஸார் நேற்றுக் காலை மீட்டுள்ளனர்.

அளவெட்டிப் பகுதியில் உள்ள வயல் ஒன்றில் இருந்தே இந்த மோட்டார் சைக்கிளை மீட்டுள்ளனர்.


குறித்த மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் யார்? அவர் கடத்தப்பட்டுள்ளாரா? அல்லது கொலை செய்யப்பட்டுள்ளாரா? என்று இதுவரையும் தகவல் கிடைக்கவில்லை.

குறித்த பகுதியில் உள்ள வயல் நிலத்தை உழுவதற்காக சென்ற விவசாயி ஒருவர் மோட்டார் சைக்கிள் அடித்து நொருக்கப்பட்ட தகவலை பொலிஸாருக்கு வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளை மீட்டுள்ளனர்.

அத்துடன் மோட்டார் சைக்கிள் அடித்து நொருக்கப்பட்ட இடத்தில் பாழடைந்த கிணறு ஒன்று காணப்பட்டதால் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் அடித்து கொலை செய்யப்பட்டு கிணற்றுக்குள் போடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் கிணற்றை பொலிஸார் துப்புரவு செய்து பார்த்தபோது அதனுள் தடயங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இதேவேளை, மோட்டார் சைக்கிளில் உள்ள இலக்கத்தை கொண்டு மோட்டார்




பதிவுத் திணைக்களத்தின் ஊடாக குறித்த மோட்டார் சைக்கிள் யாருடையது என்று பரிசோதித்து பார்க்கப்பட்டபோது அது யாழ்ப்பாணம் நவீன சந்தைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரின் என அடையாளம் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(செ-6)

# வடக்கின் முதலமைச்சருக்கு வவுனியாவில் நடந்த சோகம்



வட மாகாணசபையின் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ள சி.வி விக்னேஸ்வரன் மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக வவுனியாவில் காத்திருக்க வேண்டிய சம்பவமொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு திரும்பும் வழியிலேயே அவர் வவுனியாவில் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விசேட கூட்டமொன்று திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த கூட்டத்தை முடித்துக்கொண்டு விக்னேஸ்வரன் கொழும்புக்கு திரும்பிக் கொண்டிருந்தார்.

கொழும்புக்கு திரும்பிக் கொண்டிருந்த வட மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரனின் வாகன சாரதி வவுனியாவிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் வாகனத்தை எரிபொருள் நிரப்புவதற்காக நிறுத்தியுள்ளார்.

அங்கிருந்த ஊழியர்கள் அந்த வாகனத்திற்கு சுமார் 60 லீற்றர் வரை எரிபொருளை நிரப்பிக்கொண்டிருந்துள்ளனர்.

தற்செயலாக அவதானித்தபோது அந்த வாகனத்திற்கு பெற்றோலுக்கு பதிலாக டீசலை நிரப்பிக்கொண்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அங்கிருந்தவர்கள் வாகனம் திருத்துநரை அழைத்துவந்து வாகனத்தின் எரிபொருள் தாங்கியை கழற்றி துப்புரவு செய்ததன் மீளவும் பொருத்தி பெற்றோல் நிரப்பினர்.

இதனால் மூன்று மணிநேர தாமதத்திற்கு பின்னரே அவர் தனது பயணத்தை தொடர்ந்தார்.

இதேவேளை, அவருடைய வாகனத்திற்கு பின்னால் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் பயணத்தை மேற்கொண்டனர்.

வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நெருக்கடியான நிலைமைக்கு முகம் கொடுத்திருப்பதாக கேள்வியுற்று ஸ்தலத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி டி. கே. அபயரட்ண அவருக்கு தேவையான உதவிகளை மேற்கொண்டிருந்ததுடன் பாதுகாப்பினையும் வழங்கியிருந்தார்.

இதேவேளை, அங்கு பிரசன்னமாகியிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் பிரேமரட்ன சுமதிபால, சி. வி. விக்னேஸ்வரனுக்கு கைலாகு கொடுத்து கலந்துரையாடியமையும் குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

# தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி; யாழ்.இந்து வீரர் சாதனை



(மானிப்பாய்)

தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கும் போட்டியானது அண்மையில் கண்டி பிலிமத்தலாவ தேரானந்தா கல்லூரியில் நடைபெற்றது.

இதில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பாக 95 கிலோகிராம் எடைப் பிரிவில் பங்குபற்றிய எஸ்.கிரிசிகன் 100 கிலோகிராம் பளுவினை தூக்கி வெள்ளிப்பதக்கத்தினை பெற்றுக் கொண்டார்.

யாழ்.இந்து வரலாற்றில் முதல் தடவையாக பளுதூக்கும் போட்டியில் தேசிய மட்டத்தில் பங்குபற்றி பதக்கம் வென்ற வீரர் இவராவார். இவரது வெற்றிக்கு கல்லூரி அதிபர், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர், ஏனைய ஆசிரியர்களும் அத்துடன் கல்லூரி ஆசிரியர் திருமாறன் அவர்களும் ஆசிரியர் சுவாமிநாதன் அவர்களும் மிகவும் உறுதுணையாக இருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(23)

# நியூஸ்ரார் பிறிமியர் லீக்; ஜொலிஸ்ரார் அணி வெற்றி

நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் 2 ஆவது ஆண்டாக நடத்தும் மேற்படி வெற்றிக் கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டியில் ஜொலிஸ்ரார் அணி, விக்ரோறி அணியை 9 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்டோறி அணி 9.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 32 ஓட்டங்களை பெற்றது. சைலேஸ் 5 இலக்குகளையும் (தொடரில் ஆகக்கூடிய இலக்குகள்), ராஜா 2 இலக்குகளையும் மதூசன், மணி, பிரியதர்ஸன் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 2.4 ஓவர்களில் ஒரு இலக்கினை இழந்து 33 ஓட்டங்களை பெற்றது. விபுலன் ஒரு இலக்கினையும் கைப்பற்றினார்.

இப்போட்டியின் மூலம் ஜொலிஸ்ரார் அணி 3.33 புள்ளிகளையும் விக்டோறி அணி 0.42 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது.



அகில இலங்கை பாடசாலை மெய்வல்லுநர் சங்கம் நடத்திய சிரேஷ்ட வீரர்களுக்கான விளையாட்டுப் போட்டி அண்மையில் சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் யாழ். இந்துக் கல்லூரியினைச் சேர்ந்த வசீகரன் ஜஸ்மினன் தூரம் பாய்தலில் 6.75 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தினைப் பெற்றுக் கொண்டார். (23)

# வாக்குச்சீட்டுக்கள் மீட்பு



புத்தளத்தில் தேர்தலின்போது பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன. புத்தளம் மாவட்ட வாக்கு எண்ணும் நான்கு நிலையங்களில் ஒன்றான புனித அன்ட்றூஸ் வித்தியாலயத்திலேயே இவ் வாக்குச் சீட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

பாடசாலையில் வகுப்பறைகளை சுத்தம் செய்த போது இந்த வாக்குச் சீட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை அடுத்து பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களும், தோல்வியடைந்த வேட்பாளர்களும் பாடசாலையை நோக்கிப் படையெடுத்துள்ளனர்.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு விருப்பு வாக்கு அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, புத்தளம் மாவட்ட விருப்பு வாக்குகள் குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மூன்று முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட உள்ளதாக கபே குறிப்பிட்டுள்ளது. (செ-11)

தூரிகை
நுண்கலை வளாகம்
ம.ம.வி.வீதி, நெல்லியடி
புதிய தொகுதி பயிற்சி வகுப்புக்கள்
கேக் ஐசிங். (Cake Decoration)
ஞாயிறு-சனி, ஞாயிறு-2.30,pm
பேசியல். (Facial)
சனி, ஞாயிறு-10.00 am
ஒப்பனை/மேக்கப்..
திங்கள், வெள்ளி-10.00 am
தலைமுடி (Hair)
(நேராக்கல், சுருட்டல், வெட்டுதல்)
புதன், வெள்ளி-3.00 pm
தையல்
செவ்வாய், வியாழன்-9.30 am
தையல் Dress Making
செவ்வாய், வியாழன்-3.00 pm
துணிகளில் அலங்காரமிடல்
வசதியான நேரங்களில்...
பயிற்சிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் இணைந்து கொள்ளலாம்
0779143171 இயக்குநர்

# அரசின் முழுமையான...

தமது நலன்களைப் பிரதிபலிக்கும் வகையில் மக்கள் மாகாண சபைகளைத்தெரிவு செய்திருக்கிறார்கள். இந்த மாகாணங்களில் அமைக்கப்படும் புதிய குடியியல் தலைமைத்துவத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குவது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாகும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ஜென் பசாகி தெரிவித்துள்ளார்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள வட மாகாண சபையுடன் இணைந்து செயற்படுவதை நல்லிணக்கத்தை நோக்கிச் செயற்படுவதற்கான ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்தை நாம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கினறோம் என அவர் வாஷிங்டனில் நேற்று முன்தினம் கருத்து வெளியிட்டுள்ளார்.

செப்டம்பர் 21ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் மூன்று மாகாண சபைகளிலும் தமது பிரதிநிதிகளை வெற்றிகர மாகத் தெரிவு செய்திருக்கும் மக்களுக்கு அமெரிக்கா தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போர் 2009ஆம் ஆண்டில முடிவுக்கு வந்த பின்னர் வடக்கில் இடம் பெற்றுள்ள இந்தத் தேர்தல் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும் எனவும அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ஜென் பசாகி மேலும் குறிப்பிட்டார். (செ-11)

# வடக்குத் தேர்...

முதற்கட்ட அறிக்கையை நேற்று முன்தினம்திங்கட்கிழமை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையிலேயே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

வட மாகாணசபைத் தேர்தலல் வாக்களிப்பு மற்றும் வாக்குகளை எண்ணும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகள்சிறப்பாக அமைந்திருந்ததுடன் தேர்தல் தினத்தன்று 67.52 சதவீதமான வாக்காளர்கள் வாக்களித்திருந்தமை ஜனநாயகச்செயற்பாட்டை சுட்டிக்காட்டிய போதிலும், உள்நாட்டுக் கண்காணிப்பாளர்களை வாக்கு எண்ணும் இடங்களுக்கு உள்வாங்கிக் கொளளப்படாமை குறிப்பிடத்தக்கது.

அளிக்கப்பட்ட வாக்குகளில் 7.5 சதவீதமான வாக்குகள் செல்லுபடியற்றவை இதுஎமதுகண்காணிப்பில் அவதானிக்கப்பட்டது. இது வாக்காளர்களின் தேர்தல் வாக்களிப்பு தொடர்பிலான அறிவின்மையைச் சுட்டிக்காட்டுகின்றது.

தேர்தல் தினத்தன்று சட்ட விரோத நடவடிக்கைகள் பல இடம்பெற்றபோதும் .தேர்தல் மிகவும் சுமுகமாக நடந்தேறியது.

இலங்கையின் அரசியல் அமைப்பில் 2010ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 18-வது திருத்தச் சட்டம் போட்டித்தன்மை மிக்கதும், சாதாரணமான தேர்தலுக்கான சட்டரீதியான கட்டமைப்பிற்கு தடையானதுமாக அமைந்துள்ளது.

வட மாகாணசபைத் தேர்தலின் போது படைத்தரப்பின் பிரசன்னம் பெருமளவில் காணபபட்டதுடன் தேர்தலில் போட்டியிட்ட சில வேட்பாளர்களுக்குச் சார்பாக படையினர் செயறபட்டுள்ளனர்.

இத் தேர்தலில் ஈடுபட்ட எதிர்த் தரப்பினர் தாக்கப்பட்டமை தொடர்பிலான சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் அரச சொத்துக்கள் பெருமளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகவும் இவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

வட மாகாண சபைத் தேர்தலில் மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்கள் மற்றும் தேர்தல் விதிமுறைகளுக்கு அப்பாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 30 ஆசனங்களை கைப்பற்றி அமோக வெற்றி பெற்றுள்ளமை குறிபபிடத்தக்கது. (செ-11)

# கண்ணிவெடியில்...

ஆபத்தான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வெடிப்புச்சம்பவம் அப்பகுதி மக்களை அதிர்ச்சி மற்றும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

இதேவேளை இச்சம்பவம் காலை வேளை நடைபெற்ற போதிலும் மாலை 5 மணிவரை பொலிஸ் தரப்பினர் எவரும் சம்பவ இடத்திற்கு வருகைதரவில்லை என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (செ-11)

# நிரந்தரத் தீர்...

அமைய நிரந்தர தீர்வினை பெறுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக இந்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றமைக்கு பாராட்டுத் தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மாகாணங்களுக்கான அதிகபட்ச சுயாட்சி, மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வு, தமிழர்கள் உள்ளிட்ட ஏனைய சிறுபான்மையினர் சமமாக மதிக்கப்பட்டு அவர்களுக்கான சமஉரிமை இதன் மூலம் கிடைக்க வேண்டுமெனவும் அவர் அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

தாயகத்தில் தமிழர்களின் பாரம்பரிய உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், நாட்டின் ஆட்சியில் போதுமான பங்குபற்றுதலை வழங்குவதற்கான சந்தர்ப்பத்தை இநத வெற்றியின் மூலம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பெற்றுள்ளதாகவும் ப.சிதம்பரம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (செ-11)

# விக்னேஸ்வரனின்...

தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றி மகிழ்ச்சியளிக்கிறது. 27 ஆண்டுகால கனவு நனவாகியுள்ளது.

இலங்கை அரசாங்கம் மாகாணங்களுக்கு உரிய அதிகாரங்களை முழுமையாக வழங்க வேண்டும்.

இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு ஆதரவாகத்தான் இந்திய அரசு எப்போதும் செயற்பட்டு வருகிறது. அதுபோலத் தொடர்ந்து செயறபடும்.

இலங்கையின் நிவாரண பணிகளுக்காக இந்திய அரசு வழங்கும் உதவித்திட்டங்கள் இனிமேல் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் ஆலோசனையின் பேரிலேயே மேற்கொள்ளப்படும் என்று அவர மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# அமைதியான தேர்...

இலங்கை அரசாங்கமும், மாகாண சபையில் ஆசனங்களை வென்ற கட்சிகளும் இணைந்து பணியாற்ற வேண்டும்.

இலங்கையின் மாகாண ஆட்சியை அர்த்தமுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் முன்னெடுக்க இரண்டு தரப்புக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

நீடித்த நல்லிணக்கம் தேவை என்ற செய்தியை இந்த தேர்தல் அனைத்து இலங்கையர்களுக்கும் வழங்கியுள்ளது.

ஆனால் இலங்கையின் சகல பரஜைகளின் உரிமைகள் மற்றும அபிலாஷைகளை அங்கீகரிக்கும் முக்கியமான முதல் படியாக இந்த தேர்தல் இருக்கும்.

வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட வசதிகள் மற்றும் தேர்தல் தினத்தில் மேற்கொள்ளப்பட்ட விடயங்களை வரவேற்கின்றோம்.

எனினும் அரச வளங்கள் தேர்தல் பிரசாரத்தில் தவறாக பயன்படுத்தப்பட்டமை, வாக்காளர்கள் அச்சுறுத்திய சம்பவங்கள் மற்றும் வன்முறை சம்பவங்கள் கவலையை ஏற்படுத்தியுள்ளன.

இந்த தீவிர குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளை சடடத்திற்கு முன் கொண்டுவர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர். (செ-11)

# ஆதரவாளர்...

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் கச்சாய் பகுதியில் கூட்டமைப்பன் ஆதரவாளர் ஒருவர் பயணித்துக் கொண்டிருந்த போது வாயினை துணியால் கட்டிய நபர்கள் மோட்டார் சைக்கிளை வழி மறித்துள்ளனர்.

எனினும் குறித்த ஆதரவாளர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் சென்றுள்ளார். எனினும், அவரை பின்தொடர்ந்து வருவதை அவ தானித்த ஆதரவாளர் மோட்டார் சைக்கிளை வீதியில் நிறுத்தி விட்டு அருகிலுள்ள வீட்டுக்குள் சென்றுள்ளார்.

இதனால் ஆத்திரம் கொண்ட நபர்கள் மோட்டார் சைக்கிளை பெற்றோல் ஊற்றி கொளுத்தி உள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (செ-11)


அரியவாய்ப்பு இன்னும் சில தினங்கள் மாத்திரமே

மாதம் 250000/- வருமானம்
உணவு, இருப்பிடம் இலவசம்
ரிக்கெற்றும் இலவசம்

- 6 மாதத்திற்கு ஒரு தடவை இலவசமாக ஊர் வந்து போகலாம்.
- 2.வருட விசா நீடிக்கப்படக்கூடியது.
- டென்மார்க்கில் படிக்க, உழைக்க சட்ட ஆலோசனை.

(நிபந்தனைகளிற்கமைவாக)

7 நாட்களும் காலை 8.30 - மாலை 6.30 வரை



திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(C-4903)



CANADA WORK PERMIT

Male/ Female 20-35 Yrs
Only Spoken English
2 Years Work Contract
* Condition Apply

GSW GLOBAL STUDY & WORK CONSULTANTS
Tel : 077 007 1835
Mail : gswvisa@gmail.com
(4022)



தேவை

Trainee Accountant

A/L கணக்கியலுடன் 3 பாடங்கள்.
நாளாந்த படியாக ரூபா 150. உணவு உட்பட.
விண்ணப்பிக்குக
(4021)

Email: jaffnaccountant@yahoo.com
T.P: 077 953 0496



பல இலட்சங்களைச் சம்பாதிக்க...

வெளிநாட்டு ஹோட்டல்
& சொகுசு கப்பல்
வேலைவாய்ப்புக்கள்

- UK, Australia, New Zealand, Singapore, Malaysia, China 3ஸ்டார் 5ஸ்டார் ஹொட்டேல்கள்
- உலகம் சுற்றிவரும் அமெரிக்க சொகுசுக் கப்பல்கள்




வெளிநாட்டுப் பிரதிநிதி Ryan Kok பங்கேற்கும்
விளக்கக் கருத்தரங்கு & உடனடி அனுமதி
27-09-2013 வெள்ளி மாலை 3 மணி : யாழ் சிகரம் விரிவுரை மண்டபம்
28-09-2013 சனி காலை 10 மணி : கிளிநொச்சி சோலைவனம் விடுதி
29-09-2013 ஞாயிறு காலை 10 மணி : வவுனியா நெல்லி ஸ்ரார் விடுதி
30-09-2013 திங்கள் காலை 10 மணி : யாழ் சிகரம் விரிவுரை மண்டபம்

ENGLISH The Easy Way விசேட ஆங்கில வகுப்புக்கள் நடைபெறுகின்றன

சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(DAMRO வுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11
நேரடி: 0773 616 798



Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) புதிய பிரிவுகள் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை. தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

(Gov. Reg.No: W/A 76795)

Vivekananda Academy ,0212220393
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
Tel: 0213216928, 0774842464
(Gov. Reg.No: W/A 76795)
(C-4904)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.